ஆடவர், வனிதையர்
விரும்பும் அழகு
வண்ணப் புடைவைகளுக்கு
சிறந்த இடம்!
ச. லிங்கநாதன்
வண்ணச்சோலை
13, 14, பெரியகடை,
யாழ்ப்பாணம்.
(சி-513)



Registered as a Newspaper

# உதயன்

விலை
ரூபா
5-00

முகூர்த்தப்
பட்டுப் புடைவைகளை
தெரிவு செய்திட
இன்றே நாடுங்கள்
ச. லிங்கநாதன்
வண்ணச்சோலை
13, 14, பெரியகடை,
யாழ்ப்பாணம்.
(சி-513)

சுடர் 10 திருவள்ளுவர் ஆண்டு 2026 ஆனி 14 புதன்கிழமை (28 - 06 - 1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 213

### நியாயமற்ற கோரிக்கைகளை முன்வைக்காதீர்!

# வேலை நிறுத்தம், ஆர்ப்பாட்டங்களை தவிர்த்து போராட்டத்துக்கு உதவுக!

## சந்திரிகா பகிரங்க வேண்டுகோள்

கொழும்பு, ஜூன் 28

நியாயமற்ற கோரிக்கைகளை முன்வைத்து, தேவையற்ற ஆர்ப்பாட்டங்கள், வேலை நிறுத்தங்கள் போன்றவற்றை மேற் கொள்வதைக் கைவிட்டு, விடுதலைப் புலிகளுக்கு எதிரான போராட்டத்தை அரசு முன்னெடுத்து செல்வதற்கு, தொழிலாளர்களும், அரச ஊழியர்களும் உதவ வேண்டும்; ஒத்துழைப்பு நல்க வேண்டும்.

— இவ்வாறான பகிரங்கக் கோரிக்கை ஒன்றை ஸ்ரீலங்கா மக்களிடம் விடுத்திருக்கிறார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.

தேசிய பாதுகாப்பு நிதியத்துக்கு பல்வேறு அமைப்புகளும் அன்பளிப்புச் செய்த சுமார் இரண்டு கோடி 37லட்சம் ரூபா நிதியைப் பெற்றுக் கொண்ட பின்னர் அவ்வைபவத்தில் உரையாற்றியபோதே ஜனாதிபதி சந்திரிகா இவ்வாறு குறிப்பிட்டார்.

கொழும்பில் ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று முன்

[6 ஆம் பக்கம் பார்க்க]

### கிழக்கில் ஷெல் தாக்குதல்

கொழும்பு, ஜூன் 28.

மட்டக்களப்பு மாவட்டத்தில் கொம்மாதுறை, பெண்டுகல்சேனை ஆகிய இடங்களிலும், வயற்பிரதேசங்களிலும் உள்ள கிராமங்களிலும் தொடர்ந்து ஷெல் தாக்குதல்கள் இடம்பெறுகின்றன. இதனால் இப்பகுதிகளில் இருந்து ஐம்பதுக்கு மேற்பட்ட குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளன.

சிலர் இருக்க இடமின்றி உயிருக்கு உத்தரவாதமற்ற நிலையில் அலைவதாக தெரிவிக்கப்பட்டது. (உ-3)

## 33 பொலீஸாருக்கு எதிராக பிடியாணை!

கொழும்பு, ஜூன் 28

விடுமுறையில் வீடு சென்று கடமைக்கு மீண்டும் திரும்பாத மட்டக்களப்பு களுவாஞ்சிக்குடி பொலீஸ் நிலையத்தைச் சேர்ந்த சப் இன்ஸ்பெக்டர் உட்பட 33 பொலீஸாரைக் கைது செய்வதற்கு மட்டக்களப்பு மாவட்ட நீதிபதி ஜே. விஸ்வநாதன் பிடி ஆணை பிறப்பித்துள்ளார்.

மேற்படி பொலீஸ் உத்தியோகஸ்தர்கள் மீது பொலீஸ் சட்டக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியிருப்பதால், குற்றவியல் சட்டக்கோவையின் பிரகாரம் பகிரங்க பிடி ஆணை பிறப்பித்துக் கைது செய்ய அனுமதிக்குமாறு பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி மட்டக்களப்பு மாவட்ட நீதிமன்றத்தில் மனுச் செய்திருந்தார்.

இந்த 33 பொலீஸாரில் மூவர் தமிழர்களாவர் ஏனையோர் சிங்களவர்கள். (உ-3)

### கடந்த இரு மாதங்களில்

## கொழும்பில் 25 சடலங்கள் அழுகிய நிலையில் மீட்பு!

சிங்கப்பூர், ஜூன் 28

கொழும்புக்கு அருகில் பல்வேறு பகுதிகளிலும் கடந்த இரு மாதங்களில் அடையாளம் காணப்படாத சுமார் இருபத்தியைந்து இளைஞர்களின் சடலங்களை பொலீஸார் கண்டுபிடித்திருக்கின்றனர்.

கைகளும், கால்களும் கட்டப்பட்டு மிகவும் அழுகிய நிலையில் இச் சடலங்கள் பலவும் காணப்பட்டதாக நேற்றைய கொழும்புப் பத்திரிகைகளை மேற்கோள் காட்டி சிங்கப்பூர் வானொலி நேற்றிரவு அறிவித்தது.

இச்சடலங்கள் தமிழ் இளைஞர்களுடையவையாக இருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுவது தெரிந்தே. (உ-3)

## கட்டுமுறிவு முகாமிலிருந்து படையினர் வெளியேற்றம்

யாழ்ப்பாணம், ஜூன் 28

மட்டக்களப்பு கட்டுமுறிவு இராணுவ முகாமில் இருந்து ஸ்ரீலங்கா இராணுவத்தினர் சிறிது சிறிதாக அப்புறப்படுத்தப்படுவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இம்முகாமில் இருந்த இராணுவத்தினர் ஏனைய முகாம்களுக்கு அனுப்பப்படுகின்றனர்.

கட்டுமுறிவு இராணுவ முகாம் விடுதலைப் புலிகளின் தாக்குதல்களுக்கு உள்ளாவதால் இம்முடிவு எடுக்கப்பட்டிருக்கலாம் எனக் கருதப்படுகின்றது.

இதேவேளை —

மகாவலி 'பி' வலயத்தில் உள்ள 15 சிங்கள குடியேற்றங்களுக்கு வழங்கப்பட்டு வந்த பாதுகாப்பு மேலும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

குடியேற்றங்களை விட்டு சிங்கள குடியேற்றவாசிகள் வெளியேறுவதைத் தடுக்கவே அரசு பாதுகாப்பை பலப்படுத்தி வருவதாகக் கூறப்படுகின்றது. [உ-3]

## 5 வேங்கைகள் வீரச்சாவு

யாழ்ப்பாணம், ஜூன் 28

மட்டக்களப்பு காயங்கேணி இராணுவ மினி முகாம் மீதான வெற்றிகரத் தாக்குதலின் போது விழுப்புண் அடைந்த இரு போராளிகள் நேற்றுக் காலை வீரமரணமடைந்தார்கள்.

லெப்டினன்ட் உலகேந்திரன் அல்லது உமைகுமார் (வண்ணமணி சிவநாயகம் — மட்டக்களப்பு), வீரவேங்கை வேணுதாசன் அல்லது கோபி (அழகுதுரை நற்குணானந்தன் — மட்டக்களப்பு) ஆகிய போராளிகளே வீரமரணமடைந்தனர்.

நேற்று முன்தினம் கிளிநொச்சிப் பகுதியில் இடம்பெற்ற எதிர்பாராத வெடி விபத்தில் லெப்டினன்ட் ராமராஜன் அல்லது புலேந்திரன் (மகாலிங்கம் முகுந்தன் — அம்பாறை), 2 ஆம் லெப்டினன்ட் சிவாகரன் (சிவஞானம் பிரபாகரன் — மட்டக்களப்பு), வீரவேங்கை ஈழமணி (தம்பிப்பிள்ளை ராஜேந்திரன் — அம்பாறை) ஆகிய போராளிகள் வீரச்சாவடைந்தனர். [உ-3]

## பங்கீட்டு அடிப்படையில் சீனி விநியோகிக்கப்படும்

யாழ்ப்பாணம், ஜூன் 28

பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாக மீண்டும் ஒரு தடவை சீனியை கட்டுப்பாட்டு விலையில் விநியோகிப்பதற்கு யாழ். செயலகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

"அ", "உ" பங்கீட்டு அட்டை உடையவர்களில் ஒன்று முதல் இரண்டு அங்கத்தவர்களைக் கொண்ட குடும்பத்திற்கு ஒரு கிலோவும், 2 முதல் 4 அங்கத்தவர்களைக் கொண்ட குடும்பத்திற்கு 2 கிலோவும், 5 அங்கத்தவர்களுக்கு மேல் உள்ள குடும்பம் ஒன்றிற்கு 3 கிலோவும் சீனி பங்கீட்டு அடிப்படையில் வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (உ-4)

## 3 விமானங்கள், 6 ஹெலிகள் அடுத்த மாதம் வந்து சேரும்

யாழ்ப்பாணம், ஜூன் 28

ஸ்ரீலங்கா விமானப் படைக்கென ரஷ்யாவிடம் இருந்து கொள்வனவு செய்த ஏ.என். 32 ரக விமானங்கள் மூன்று அடுத்த மாதம் ஸ்ரீலங்காவுக்கு கொண்டுவரப்படவிருக்கின்றன.

அத்துடன் எம். ஐ 17 ரக ஹெலிகள் ஆறும் வந்து சேரலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

ஏ. என். 32 ரக போக்குவரத்துவிமானங்கள் 50 பேரையும் 6 தொன் எடையுடைய பொருள்களையும் காவிச் செல்லக்கூடியது.

கடற்படை விநியோகத்துக்காக கடற்கலங்களை கொள்வனவு செய்ய இரு அதிகாரிகள் குழு இஸ்ரேலுக்கும், வேறு நாடுகளுக்கும் சென்றுள்ளது தெரிந்ததே. (உ-3)

## கனடாவில் சூட்டுச் சம்பவம்: 3 ஈழத் தமிழர் மீது வழக்கு

கொழும்பு, ஜூன் 28

கனடாவில் நடைபெற்ற இரு துப்பாக்கிப் பிரயோக சம்பவங்கள் தொடர்பாக மூன்று இலங்கைத் தமிழர்கள் மீது வழக்குத் தாக்கல் செய்யப்படவிருப்பதாக கனேடிய பொலீஸார் தெரிவித்தனர்.

கடந்த 17 ஆம், 18 ஆம் திகதிகளில் இலங்கைத் தமிழர்கள் சம்பந்தப்பட்ட இரு துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றன.

ஜொங்கேகோர் வீதியிலும், சென் ஜேம்ஸ் நகர சேகோன் வீதியிலும் இச் சம்பவங்கள் இடம்பெற்றன. (உ-3)

### தாண்டிக்குளம் ஊடாக

## உணவுப் பொருள் எதுவும் 2 கிலோவுக்கே அனுமதி

கொழும்பு ஜூன் 28

தாண்டிக்குளம் இராணுவ தடைமுகாம் ஊடாக வட பகுதி செல்லும் எவரும் உணவுப் பொருள், உப - உணவுப் பொருள் எதுவாயினும் 2 கிலோவுக்கு மேல் கொண்டு செல்ல முடியாது என்று அங்கு பணியாற்றும் படையினர் மக்களுக்கு அறிவுறுத்தியுள்ளதாக கொழும்பு பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

சீனி, பால்மா போன்றவை கூட இரு கிலோவே எடுத்து வரமுடியும்.

பிஸ்கெட் கூட ஒருபெட்டி மட்டும் எடுத்து வர முடியும்.

முன்னர் உணவுப் பொருள்களை எவரும் தம்முடன் தாராளமாக எடுத்துச் செல்ல படையினர் அனுமதித்து வந்தனர். (உ-3)

## படையினரின் ஹெலியே தாக்குதலுக்கு இலக்கானது

கொழும்பு, ஜூன் 28

கடந்த வெள்ளியன்று வாகரையிலிருந்து புறப்பட்ட ஸ்ரீலங்கா விமானப்படையின் ஹெலிக்கொப்டர் ஒன்று விடுதலைப் புலிகளின் ரி—56 ரகத் துப்பாக்கியின் வேட்டினால் சேதமுற்றதை அடுத்து உடனடியாக வெலிகந்தைப் பகுதியில் தரையிறக்கப்பட்டது.

பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள்காட்டி கொழும்புப் பத்திரிகை ஒன்று இச்செய்தியை வெளியிட்டுள்ளது.

தாக்குதலுக்கு இலக்கானதை அடுத்து அருகில் இருக்கக் கூடிய "பாதுகாப்பான இடமான" வெலிகந்தைப் பகுதியில் ஹெலியை இறக்க விமானி முடிவு செய்ததாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தச் சம்பவத்தையே "வாகரைப் பகுதியில் படையினரின் விமானம் புலிகளின் தாக்குதலுக்கு இலக்காகியது" — என்று நேற்று முன்தினம் இரவு ஏஜென்ஸி செய்தி ஒன்று அறிவித்தது. (உ)

## "மாஹோ"வில் சவர்க்காரம் தே. எண்ணெய் வருகின்றன

யாழ்ப்பாணம், ஜூன் 28

மண்ணெண்ணெய், தேங்காய் எண்ணெய், சவர்க்காரம், மற்றும் பாண் உற்பத்திக்குத் தேவையான "ஈஸ்ட்" போன்ற உபமூலப் பொருள்களை ஏற்றிக்கொண்டு "மாஹோ" கப்பல் அடுத்த வாரமளவில் பருத்தித்துறை வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

"மாஹோ" கப்பல் உரத்தை ஏற்றிவருவதற்கென சுமார் ஒருமாத காலமாக கொழும்புத் துறைமுகத்தில் காத்து நின்றது.

உரவகைகளை ஏற்றிச் செல்லத் தடை விதிக்கப்பட்டதைத் தொடர்ந்து, மண்ணெண்ணெயையும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் பொருள்களையும் எடுத்துவர ஏற்பாடாகி உள்ளது.

இதேவேளை, இடம்பெயர்ந்தவர்களுக்கு வழங்கப்படும் உலர் உணவு நிவாரணப் பொருள்களை ஏற்றிக்கொண்டு "லங்கா கல்யாணி" கப்பலும் அடுத்தவாரம் பருத்தித்துறை வந்து சேரும் என்று நம்பப்படுகிறது.

திருகோணமலையில் இப்போது மா ஏற்றிக்கொண்டிருக்கும் "ஹபரண" கப்பல் இவ்வார இறுதியில் பருத்தித்துறை வந்து சேரும் என்று [illegible] [அ-3 4]

## திருமலை நகரில் சூட்டுச் சம்பவம்: ரெலோ உறுப்பினர் இருவர் கைது!

### அவர்களில் ஒருவர் நகரசபை அங்கத்தவராம்

கடந்த சனிக்கிழமை இரவு 8-30 மணியளவில் திருகோணமலை நகர வீதியில் சென்றுகொண்டிருந்த முன்னாள் இராணுவச் சிப்பாய் உட்பட இருவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்ட சம்பவத்தை அடுத்து ரெலோ அமைப்பைச் சேர்ந்த மாநகர சபை உறுப்பினர் ஒருவரும் மற்றுமொருவரும் பொலீஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

திருகோணமலை நகரசபை பிரதி தலைவரின் வீட்டுக்கு முன்பாக வைத்து இருவர் மீதும் மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டதாகவும் —

ஆனால் அவர்கள் மயிரிழையில் தப்பிவிட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவத்தையடுத்து தேடுதல் நடத்திய பொலீஸார், ரெலோ அமைப்பின் அலுவலகத்தில் அந்த அமைப்பினரின் பாதுகாப்புக்காக வைத்திருந்த ஆயுதங்களை கைப்பற்றியதுடன் அங்கு இருந்த நகரசபை அங்கத்தவர் உட்பட இருவரை கைது செய்தனர்.

அவர்கள் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டுள்ளனர். அவர்களை அடுத்த மாதம் 5 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார். (உ-3)

## வருட இறுதிக்குள் 12,000 தமிழரை திருப்பி அனுப்புவதற்கு சுவிஸ் முடிவு

யாழ்ப்பாணம், ஜூன் 28

இவ்வருட இறுதிக்குள் சுமார் 12 ஆயிரம் ஈழத்தமிழ் அகதிகளைத் திருப்பியனுப்ப சுவிஸ் அரசு தீர்மானித்திருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இத் தீர்மானத்துக்கு அந்நாட்டு எதிர்க்கட்சிகளும், பொது அமைப்புக்களும் எதிர்ப்பு தெரிவித்துள்ளன.

91 ஜூலை மாதத்துக்குப் பின்னர் அகதிகளாகச் சென்றவர்களே திருப்பி அனுப்பப்படவுள்ளனர்.

சிறுசிறு குழுக்களாக தமிழ் அகதிகளை பலவந்தமாகத் திருப்பி அனுப்பும் நடவடிக்கையை சுவிஸ் அரசு ஏற்கனவே ஆரம்பித்திருப்பதாகக் கூறப்படுகின்றது. (உ-3)

## பேச்சில் நடந்து கொண்டது போல் யுத்தத்தில் சந்திரிகா அசமந்தம்!

### ரணில் கூறுகின்றார்

கொழும்பு, ஜூன் 28

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா சமாதான முயற்சிகளில் திட்டமிட்டு, முழுமூச்சாக ஈடுபடவில்லை. அதே போன்றே யுத்தத்திலும் அவர் ஈடுபடவில்லை என்பது தெளிவாகத் தெரிகின்றது.

எதிர்க்கட்சித் தலைவரும் ஐ. தே. க தலைவருமாகிய ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு கூறினார்.

நாம் திசைதெரியாமல், எங்கே போகிறோம் என்பது விளங்காமல், வெறுமனே தத்தளித்துக்கொண்டிருக்கின்றோம்.

அரசாங்கத்தின் சமாதான முயற்சிகள் தெளிவாக திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படவில்லை.

ஏனோ தானோ என்ற விதத்தில் அவை தொடங்கப்

(6 ஆம் பக்கம் பார்க்க)

### முச்சந்திமுரளி



உது ... காசியப்பன் கதை போலை எல்லோ கிடக்கு...!

## தந்தையைப் புரட்சி மூலம் கவிழ்த்து தனயன் ஆட்சிக்கு!

### கட்டாரில் சம்பவம்

லண்டன், ஜூன் 28

வளைகுடா நாடான கட்டாரில் இரத்தம் சிந்தா புரட்சி ஒன்றின் மூலம் நேற்று ஆட்சி மாற்றம் இடம்பெற்றது.

நாட்டின் தலைவராக இருந்த அமீர் ஷேக் காலிதா பின் ஹமத் அல்தானி வெளிநாடு ஒன்றுக்குச் சென்றிருந்த சமயம், அவரின் மகனும் நாட்டின் பட்டத்து இளவரசுமான ஹமத் பின் காலிதா அல்தானி புரட்சி மூலம் ஆட்சியைக் கைப்பற்றினார்.

வன்முறைச் சம்பவங்கள் ஏதும் இல்லாமல் ஆட்சிக் கவிழ்ப்பு இடம் பெற்றதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நாட்டின் புதிய தலைவர் ஆடம்பரமற்ற வைபவம் ஒன்றில் பதவியை ஏற்றுக் கொண்டார். (உ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

வீட்டுப் பாவனைக்குரிய அலுமாரி, கட்டில்கள், ஸ்ரீல் அலுமாரி, பைல் கபினட், செற்றி வலைகள், மீன் தொட்டி, தையல்மெஷின், சாப்மெற், T.V. டெக், றேடியோ, கண்ணாடி சோக்கேஸ், ரைப்றைட்டர் மற்றும் வீட்டுக்குத் தேவையான சகல விதமான பொருள்களும் விற்பனைக்குண்டு. இல. 275, பிரதான வீதி, யாழ்ப்பாணம். (37259)

### LAND FOR SALE

Paddy Land Under Irrigation Scheme at Kilinochchi Extent 16 Acres, 2 Roods 36 perches Yielding 50 to 60 Bushles Per Acre. Preference Given to Religious Missions Apply: 973, C/o Uthayan. [8606]

### கண்டீர்களா?

கைதடிக்கும் சாவகச்சேரி கச்சாய் வீதி மக்கள் கடைக்கும் இடையில் கறுப்பு பிரேமிட்ட மூக்குக்கண்ணாடி தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் சாவகச்சேரி, "விமலாஸ்" கடையில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். [சி-1564]

### புலமைப் பரிசில்

ஆண்டு - 5 புலமைப்பரிசில் தேர்வுக்கான வினாப்பத்திரம் 1, வினாப்பத்திரம் 2க்குரிய பொதுவிவேகம், பொதறிவு வெளிவந்துவிட்டது. வெளியீடு: சுப்பிரமணிய புத்தகசாலை, யாழ்ப்பாணம். [37173]

### தேவை

சிறந்த முறையில் 'ஆயல்' பண்ணக்கூடியவர்கள் உடன் தேவை. தொடர்புகொள்ளவும். கயல் சலவை அகம், இல. 104, கொழும்புத்துறை வீதி, யாழ்ப்பாணம். [37257]

வெளிவந்துவிட்டது

**பொது உளச்சார்பு IQ 5**

கலாநிதி
க. குணராசா

எல்லாப் பிரபல புத்தகசாலைகளிலும் கிடைக்கும். (37266)

---

ஓம் சாயிராம்

## 31-ம் நாள் நினைவஞ்சலி



**செல்வி சௌந்தரராஜா விஜிதா**

இலங்கையில் தோற்றம்: 07 - 04 - 1969
இலண்டனில் மறைவு: 29 — 05 — 1995

இளம் வயதில் எங்கள் அனைவரையும் ஆறாத் துயரத்தில் ஆழ்த்திவிட்டு இறைவன் திருவடி நோக்கிச் சென்ற விஜிதா! உனது ஆத்மா சாந்தியடைய பகவானைப் பிரார்த்திக்கின்றோம்

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

இலங்கைவாழ் பேர்த்தி, தாய்மாமன்மார், மாமிமார், பெரியப்பாமார், பெரியம்மாமார், சித்தப்பாமார், சித்திமார், மச்சான்மார், மச்சாளிமார், உடன்பிறவா சகோதரர்கள், சகோதரிகள், உறவினர்கள்.

திரு. கு. பாக்கியநாதன்,
அரியாலை. [37252]

---

## பிற்போடப்பட்டுள்ளது

மானிப்பாய் மகளிர் கல்லூரி வர்த்தக மாணவ மன்றத்தினரால்
28 — 06 - 1995 புதன்கிழமை நடைபெறவிருந்த
"பொன்மாலைப் பொழுது" நிகழ்ச்சி
03 – 07 – 1995 திங்கட்கிழமைக்கு
தவிர்க்கமுடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது.

— மானிப்பாய் மகளிர் கல்லூரி வர்த்தக மாணவ மன்றம்.

[37265]

---

உ
சிவமயம்

# விவாஹ சுபமுகூர்த்த அழைப்பு

அநேக நமஸ்காரம்/ஆசீர்வாதம்/உபய குசலோபரி ஸ்வஸ்திஸ்ரீ
நிகழும் யுவ வருஷம் ஆனி மாதம் 15ஆம் நாள் (29 — 06 — 1995) வியாழக்கிழமை புனர்பூச நக்ஷத்திரமும், அமிர்த சித்தயோகமும கூடிய சுப நாள் முற்பகல் 7-55 மணி முதல் 8-50 மணி வரையுள்ள குருஹோரையுடன் கூடிய கர்க்கடக லக்ன சுப முகூர்த்தத்தில்,

| எமது கனிஸ்ட புத்திரன் சிரஞ்சீவி | எமது துவிதிய புத்திரி சௌபாக்கியவதி |
| --- | --- |
| மனோரஞ்ஜ சர்மாவிற்கு | சசிகலாதேவியை |

மணமகள் இல்லத்தில் வைத்து கன்னிகாதானம் செய்து திருமாங்கல்யதாரண பாணிக்கிரஹன விவாஹம் நிகழ்த்த ஸ்ரீவிநாயகப்பெருமானின் திருவருளுடன் ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு சங்கராசார்ய சுவாமிகளின் ஆசியுடன் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் தாங்கள் குடும்ப சமேதராக வந்திருந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

சமாவர்த்தனம்:
அன்று அதிகாலை 4-00 மணி மணமகன் இல்லம்
வதூவரக் கிருஹப் பிரவேசம்:
அன்று மாலை 3-00 மணி மணமகன் இல்லம்
வரவேற்புபசாரம்:
30 — 06 — 1995 வெள்ளிக்கிழமை மாலை 4 00 மணியளவில் மணமகன் இல்லத்தில் நடைபெறும்.

இங்ஙனம்
★ தங்கள் நல்வரவை நாடும் ★

ஸ்ரீமதி ஸ்ரீ ஐ. பாலசுப்பிரமணியசர்மா
கல்லூரி முன், சந்நரோடை,
சுன்னாகம்.

ஸ்ரீமதி ஸ்ரீ சோ. குகனேசசர்மா,
பங்குருலேன், சங்கரத்தை,
வட்டுக்கோட்டை.

[8449]

---

# சிங்களத்தில் தேர்ச்சி வேண்டுமா?

பேச, எழுத, வாசிக்க பரீட்சையில் சித்தி அடைய நாடவேண்டிய ஒரே இடம்

## 'A' LEVEL CENTRE

**1st Lane Point Pedro Road, Jaffna**

ஆரம்பம்: **01 - 07 - 1995**

Sat & Sun. பிரிவு I 8 — 9 a.m.
Sat. & Sun. பிரிவு II 3-15 — 4-15 p.m.

ஆசிரியர்:
Miss A. ALISTA.

(சி-1713)

---

## 8TH YEAR REMEMBRANCES

**SINNATHAMBY RAJENDRAM**

AT REST: 28 — 06 — 1987

Memories
Precious Memories
How they linger
How they flood our minds and souls
Darling Dadda, you live in our hearts
As of Old - To - Day and Everyday.

— Your Loved Ones.

(8597)

---

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 11 — 01 — 1953
மறைவு: 20 — 06 — 1993



**நல்லையா நிற்குணம்**
[பொறியியலாளர்]

திதி: 28 — 06 — 1995

என் இதயத்தில் வீற்றிருக்கும்
அன்புத் தெய்வத்தின் ஈராண்டு நினைவலைகள்
உங்கள் பாதங்கட்கு எமது கண்ணீர் அஞ்சலிகள்
உங்கள் நினைவால் வாடும்

அன்பு மனைவி: நி. யசோதரா
ஆருயிர் செல்வங்கள்: மதுரா, குணசீலன், பிரியா,

இணுவில் மேற்கு. (37261)

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மலர்வு: 26 — 09 — 1916
உதிர்வு: 29 — 05 — 1995



**அமரர் சரவணமுத்து நடராசா**
[பாலபண்டிதர்]

எந்தையே எழுமைக்கும் எமதரும் தந்தையே
முந்தையே செய்தவப் பெம்மானெம் அம்மானே
சிந்தையே விளையாட்டு விற்பன்னத் தாத்தனே
நஞ்சையே நாவைத்த நாதனடி நாடினையே

அன்னாரது இறுதிக் கிரியைகளில் கலந்து உதவிகள் புரிந்த அனைவருக்கும் எமது நன்றியை தெரிவித்துக் கொள்வதுடன் இன்று (28 - 06 - 1995) புதன்கிழமை காலை 10 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் கலந்து கொள்ளும்படி அனைவரையும் வேண்டுகின்றோம்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,

குயின்ககாமன்ஸ்,
183 சிறப்பு அங்காடி [உட்புறம்],
யாழ்ப்பாணம்,
162 [இளைஸ்தாபனம்] நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
[illegible] நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

[37262]

---

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 07 — 11 — 1912
மறைவு: 09 — 07 — 1994



**அமரர் வி. சிவஞானசுந்தரம்**
B. A (Lond)
(Retired Chief Accountant)

திதி: 28 - 06 - 1995

(சாவகச்சேரி கோவில் குடியிருப்பு ஞான வீரபத்திரர் கோவில் தர்மகர்த்தா)

அன்பே உருவான பப்பாவே
ஆண்டொன்று ஆனது பப்பா உங்கள்
அன்பு முகம் பார்த்து
உங்கள் ஆத்மா சாந்தியடைய
எல்லாம் வல்ல வீரபத்திரரை வேண்டுகிறோம்.

தங்கள் பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

கைலாசபிள்ளை வீதி,
சாவகச்சேரி. (37255)

---

## 46 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம்: 08 — 07 — 1983
மறைவு: 14 — 05 — 1995



செல்வன்
**சிவானந்தராசா துவாரகன்**
(கரன்)

விண்ணில் கலந்த உன் உயிரை
எண்ணிக் கலங்கும் இதயங்கள்
எத்தனையோ நினையாத நேரம்
எம்மைப் பிரிந்த
அணையாத ஒளி விளக்கே துவாரகா
அன்பின் பிறப்பிடமாய் கரன் என்று
ஆசையுடன் அழைத்த நாங்கள்
உன்னையே எண்ணித் தவிக்கின்றோம்
உன் நினைவுகளே எம் கண்முன்னே நிற்குதையா
உன் ஆத்ம சாந்திக்காக இறைவனையே வேண்டுகிறோம்.

இன்று [28 - 06 - 95] புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் பங்குபற்றும்படி உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பிரிவால் துயருறும்;
தந்தை, சகோதரிகள்,

ஜெயகிருஷ்ணா
ஐயனார் கோயிலடி,
சுன்னாகம். [37230]

---

## 4-ம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 10 — 09 — 1922
மறைவு: 28 — 06 — 1991



**திருமதி பொன்மலர் நடராசா**
(யோய்ஸ் பார்மஸி, பிரதான வீதி, பண்டத்தரிப்பு)

அன்பால் எமை அரவணைத்து
அவனியிலே வாழ வைத்த
அன்பு அம்மாவே!
அம்மா என நாம் அழைத்து
ஆண்டுகள் நான்கு சென்றதுவோ.

இப்புவியில் நின் உதவியின்றி
தவிக்கின்றோம், தெரியலையோ
அம்மாவே!
எனி எப்பிறப்பில் உமைக்
காண்போம் என
ஏங்குகின்றோம் அம்மாவே.

பிரிவால் துயருறும்;
அன்புக் கணவன், மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

உரும்பிராய். [8600]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆவரங்கால் ஸ்ரீ பர்வதவர்த்தனி சமேத நடராஜ ராமலிங்கேஸ்வரர் தேவஸ்தானம்

# ★ சித்திரத் தேர் வெள்ளோட்ட விழா மலர் ★

(28 - 06 - 1995)

## தெய்வீகக் காட்சி

ஆவரங்கால் என்றதும் அங்கு அருள் பாலிக்கும் சிவனது திருவருட் பெருமைதான் அனைத்துச் சைவ மக்களின் உள்ளங்களிலும் இடம்பெறும் ஆத்மீக உணர்வாகும். இராமலிங்கேஸ்வரப் பெருமான் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் அற்புதமான ஆலயம் இதுவாகும். சில ஆண்டுகளுக்கு முன்பு இங்கு வெகு சிறப்பாக குடமுழுக்கு விழா நடைபெற்று மேலும் புதுப் பொலிவு பெற்று விளங்குகிறது.

மூர்த்தி, தலம், தீர்த்தம் முறையாக அமைந்த இவ்வாலயத்துக்கு இன்று சித்திரத்தேர் ஒன்றும் உருவாக்கப்பட்டிருப்பது உவகை தரும் நிகழ்வாகும். சிற்பச்சக்கரவர்த்தி சீவரத்தினம் அவர்களின் புதல்வர் ஜெயப்பிரகாஷ் அவர்கள் தனது நிறைவான அனுபவங்களை வைத்துக்கொண்டு இப்பணியை நிறைவேற்றியுள்ளார். ஆலய பரிபாலன சபையும், இவ்வூர்ச் சைவபிமானிகளும் திருப்பணிகளுக்கு அள்ளி வழங்கும் வள்ளல்களும் ஒன்றுபட்டு இவ்வற்புதமான சித்திரத் தேரை உருவாக்கி வெள்ளோட்டம் காண்கின்றனர்.

மகோற்சவத்தின் சிறப்புக்குரிய இரதோற்சவம் சங்காரத் தொழிலை உணர்த்துவதாகும். இது பஞ்ச கிருத்தியங்களில் உயர்ந்தது. தீயவற்றை மாய்த்து நல்லவற்றை நிலைபெறச் செய்வது இறைவனின் கருணை விளையாட்டாகும். மும்மலங்களை அடக்கித் திருவருள் வெளிப்பாட்டை மேலெழச் செய்யும் நிலை சங்காரத் தொழிலுக்கு உண்டு.

"முப்புரம் செற்றனர் என்பர்கள் மூடர்கள்
முப்புரம் என்பது மும்மல காரியம்"

என்பது திருமந்திரம். இறைவன் சங்கார மூர்த்தியாக இரதத்தில் இருந்து திரிபுரசங்காரம் செய்து தீயவற்றை அழித்துவிட்டு சாந்த மூர்த்தியாக இருப்பிடத்தை அடைகின்ற காட்சி தேர்த்திருவிழாவிலன்று நாம் காணும் தெய்வீகக் காட்சியாகும்.

சிவபரம் பொருளின் திருநாமங்களில் ஒன்று திரிபுரம் எரித்த விரிசடைக் கடவுள் என்பது வித்தியுன் மாலி என்போரை அடக்கி அனைத்து ஜீவராசிகளையும் இரட்சித்தான் இறைவன் என்பது புராண வரலாறு. தேர் உற்சவம் இந்த வகையில் இடம்பெறுகிறது.

எனவே மகோற்சவத்தில் சிறந்ததாகிய இரதோற்சவத்துக்கு இன்றியமையாது அமைய வேண்டிய தேர்த்திருப்பணியில் ஈடுபாடு கொண்டு ஆதரவு வழங்கிய அனைவருக்கும் எமது வாழ்த்தும், வணக்கமும் உரித்தாகுக.

—சிவத்தமிழ்ச்செல்வி
தங்கம்மா அப்பாக்குட்டி,
தலைவர்.

துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.




பக்தர் குழாம் புடைசூழவுள்ள
சித்திரத் தேர்

## நல்லுணர்வை உண்டாக்குக!

ஆவரங்கால் சிவன் கோயில் வெள்ளோட்ட விழா நடப்பதையிட்டு மிகவும் மகிழ்ச்சியடைகின்றோம். ஆலயத்தின் அருட்பொலிவை அதிகரிக்கச் செய்யும் மஹோற்சவத்திலே இரதோற்சவம் மிக முக்கியமானதாகும். ஆலயமே அசைந்து வருவது போல அன்பர்களை நாடி அருள்தர இறைவன் தேரேறி வரும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும். அத்தகைய பெருவிழாவுக் குகந்த புதிய சித்திரத் தேர் இப்போது அமைக்கப்பட்டிருப்பது சாலவும் பொருத்தமானதே.

ஊர் கூடித் தேரிழுக்கும் உத்தமப் பெருவிழா ஒற்றுமையின் சின்னம். இறைவனின் அருட்செயல்களையும் உலகியல் வாழ்வையும் ஒருங்கே சித்தரிக்கும் இத்தேர் மக்கள் மனங்களில் நல்லுணர்வைத் தோற்றுவிக்கட்டும்.

இவ் விழாவையொட்டிச் சிறப்புமலர் வெளியிடுவதும் சிறந்தவொரு கைங்கரியமாகும். பலர் நல்லறிவு பெறுதற்கு மலர் உதவட்டும்.

இத் திருப்பணியிலே ஈடுபட்டுப் பொருளுதவி, ஆதரவு வழங்கிய அன்பர்களுக்கும், மலர் வெளியீட்டிற்கு ஆக்கங்கள் வழங்கியவர்களுக்கும், இவ் விழாக்களில் கலந்து கொள்ளும் அடியார்களுக்கும் சகல சௌபாக்கியங்களும் கிட்ட வேண்டுமென எல்லாம் வல்ல வள்ளி தெய்வானை சமேத சண்முகநாதப் பெருமானைப் பிரார்த்தித்து எமது நல்லாசிகளை வழங்குகின்றோம்.

— சிவஸ்ரீ சு. இராஜேந்திரக்குருக்கள்,
பிரதமகுரு,
நீர்வேலி கந்தசுவாமி கோயில்,
நீர்வேலி.

## நலம் மலியட்டும்

"என்னிலும் இனியார் எவரும் இலர்
என்னிலும் இனியசன் ஒருவன் உளன்
அன்னவன் அகந்தோறு அமர்ந்தாட்சி செய்
மன்னன் கொய்வலை மாதொரு கடறனே"

என்றபடி எம்மிலும் எமக்கு இனியராய் எல்லோருடைய இதயங்களிலும் இருந்து இறைமை செய்பவர் பரமேஸ்வரன் கொய்வலைப்பதியில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீபர்வதவர்த்தனியம்மை சமேத ஸ்ரீநடராஜராமலிங்கப் பெருமான் ஒருவரே.

அப்பெருமானது சிவாலயப் புனருத்தாரண திருப்பணிச் சபையிலும் இத்தேர்த் திருப்பணிச்சபையிலும் என்னையே தலைவராக அங்கீகரித்துப் பணியாற்ற வேண்டிக் கொண்ட ஊர்ப்பெருமக்களுக்கு மனங்கனிந்த நன்றி.

எல்லாவகையிலும் ஒத்துழைப்பு நல்கித் தேர்த்திருப்பணி செவ்வனே நிறைவுற ஊக்கிய சபை உறுப்பினர்களுக்கு நன்றிகள் பல.

நிதியுதவிய சீரியோர்க்கும் உரிய காலத்தில் திறம்படத் தேரை உருவாக்கித் தம் கைவண்ணத்தைக் காட்டிய சிற்பாசாரியர்களுக்கும், மற்றும் பலவகையிலுதவியவர்களுக்கும் நன்றிகள் பல.

இவர்கள் யாவர்க்கும் ராமலிங்கேஸ்வரர் திருவருளைப் பரிபூரணமாகப் பாலிப்பாராக.

எல்லோரும் இனிது வாழ்க. என்றும் இன்பம் பெருகுக. சிவனருளால் சித்திரத்தேர் வெள்ளோட்டம் சிறப்புறுக. நலம் மலிய நாடு வாழ்க.

ச. சோமசுந்தரம்
தலைவர்,
தேர்த்திருப்பணிச் சபை.

ஆவரங்கால்,
புத்தூர்.

## திருக்கோயில் வரலாறு சொல்லும் தேர் இது!

ஆவரங்கால் நடராஜ ராமலிங்க சுவாமிக்கு
சிற்ப வேலைத்
தேர்சமைத்துப் பர்வதபத் தினியுடனே எழுந்தருளச்
செய்தார் இந்த
ஊரவர்;பே ருபகாரம் புரிந்தார்கள்; —
போற்றுதலுக்(கு)
உரித்தா னார்கள்!
வாரிவழங் கியதாலே வள்ளல்களாய் மதிக்கப்பெற்று
என்றும் வாழ்வார்!

தாமரைப்பூ வடிவமைத்து மேல்தளத்தைத் —
தஞ்சைக
வுடையார் கோயில்
போலமைத்து மீனாக்ஷி கல்யாணக் காட்சிகளும்
புனைந்தும், ஏனைத்
தேவரையும் அறுபத்து மூவரையும் உயிர்துடிப்பாய்ச்
செதுக்கி வைத்தோன்
யாவனெனில் ஜெயப்பிரகாஷ் என உலகம் —
கொண்டாடும்
சிற்பா சாரி!

சிலையுருவில் திருக்கோயில் வரலாறு சொல்லுகிற
தேர்எம் கண்முன்
கலையழகு சொட்ட அசைந்தாடிவரும்! —
கைகளெலாம்.
வடந்தொட் டீர்க்கும்!
தலம், மூர்த்தி, தீர்த்தமெனும் சிறப்பெல்லாம் —
ஒருங்கமைந்த
தால்இக் கோயில்
நிலையான புகழோடு நிற்கிறது நம்மையெலாம்
நிமிர்த்த வேண்டி!

- சோ. பத்மநாதன்.

## சிற்பாசாரியாரின் வாழ்த்துரை

சைவப் பண்பாடும் சாந்த குணமும் கொண்ட மக்கள் வாழும் ஆவரங்கால் ஆபுரங்காடு (பசு மேயும் புலம்) என்பதன் மருவல் ஆகும்.

இத்தகைய பகுதியில் பர்வத பத்தினிசமேதராய் எழுந்தருளியிருக்கும் சிவ பெருமானுக்கு சித்திரத்தேர் செதுக்கும் பணிநிறைவேறி உள்ளது. சமய சாஸ்திரவிதி சிற்பாஸ்திர முறை என்பவற்றோடு ஆலயத்தின் சுற்றுப்புறச் சூழலையும் ஆலயத்தின் அமைப்பையும் அவதானித்து இத்தேர்புனையப்பட்டுள்ளது.

இவற்றோடு எழுந்தருளும் தெய்வத்தின் மூர்த்திகளை நன்கு அவதானித்து அருள் மேலும் செழிக்கும் வகையிலேயே இந்த சித்திரத் தேர் நிர்மாணிக்கப்பட்டு உள்ளது.

இச்சித்திரத் தேரை உருவாக்க எல்லாவகையிலும் உதவிய அனைவருக்கும் எம்பெருமான் நல்லருள் மழை பொழிந்து பாலிப்பாராக.

-ஜீவரத்தினம்
ஜெயப்பிரகாஷ்


தேர் வெள்ளோட்டம் விழா
சிறப்புற வாழ்த்துகிறோம்

**மல்லிகா ஸ்ரோர்ஸ்**
யாழ். பருத்தித்துறை வீதி, ஆவரங்கால்.

**திருப்பதி ஆடை அகம்**
33, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

**மணி ஸ்ரோர்ஸ்**
யாழ். பருத்தித்துறைவீதி, ஆவரங்கால்.

**நிலா ஆடை அகம்**
164, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

**சிவா பலபொருள் வியாபாரம்**
யாழ். பருத்தித்துறை வீதி, ஆவரங்கால்,

**கபிலா காலணியகம்**
இல. 4, சந்தோசம் தெரு, (கஸ்தூரியார் வீதி)
யாழ்ப்பாணம்.

**இ. விஜயன்**
யாழ். பருத்தித்துறை வீதி, ஆவரங்கால்,



தேர் வெள்ளோட்டம் விழா
சிறப்புற வாழ்த்துகிறோம்

**ஜதி அரிசி ஆலை**
யாழ். பருத்தித்துறை வீதி, அச்சுவேலி.

**ஞானம் பட்டுச்சோலை**
18A, நவீனசந்தை, யாழ்ப்பாணம்.

**கார்த்திகா குளிர்களி நிலையம்**
யாழ். பருத்தித்துறை வீதி, ஆவரங்கால்.

**கணேசானந்தா பட்டுமாடம்**
15, சிறப்பு அங்காடி, யாழ்ப்பாணம்.

**கிருபா எரிபொருள் நிலையம்**
யாழ். பருத்தித்துறை வீதி, அச்சுவேலி.

**சாந்தி புடைவை அகம்**
157, நவீனசந்தை, யாழ்ப்பாணம்.

**கிருஷ்ணா உணவகம்**
யாழ். பருத்தித்துறை வீதி, ஆவரங்கால்.



(விளம்பர இல.37249)

**லிங்கம் பட்டு அகம்**

புத்தூர். 18, 21, நவீனசந்தை யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆவரங்கால் ஸ்ரீ பர்வதவர்த்தனி சமேத நடராஜ ராமலிங்கேஸ்வரர் தேவஸ்தானம்

# ★ சித்திரத் தேர் வெள்ளோட்ட விழா மலர் ★

(28 - 06 - 1995)

## சமயத்துடன் சங்கமமாகி சமயச்சார்பான கலை வடிவமாகிய தேரின் அமைப்பு விதிகள்

தமிழ் மக்களின் பண்பாட்டுப்பாரம் பரியங்களுடன் ஒன்றிணைந்த ஓர் கலைப் பொருளாகத் தேர் காணப்படுகின்றது. (மிகப்பழங்காலத்தில் இருந்தே தேர், தமிழ் நாட்டில் இருந்திருக்கின்றது எனப தற்குச் சங்கஇலக்கியங்களிலே சான்றுகள் பலவுள] சக்கரம் [சில்லு], பாவனைக்குவரத் தொடங்கி அவற்றின் படிப் படியான வளர்ச்சிக்கட்டத்திலே தேர் உருவாக்கியிருக்கலாம் என்று ஊகிக்க முடிகின்றது.

## வாழ்த்தும்வணக்கஉரையும்

"செல்வன்கழலேத்தும் செல்வம் செல்வமே" [சம்பந்தர்)
"சிவனெனும் நாமம் தனக்கேஉடைய செம்மேனி அம்மான் அவன் எமை ஆட்கொண்டு அருளிடும்"
"பொன்னும் மெய்ப்பொருளும் தருவானைப்போகமும் திருவும்புணர்ப்பானை" [அப்பர்]
"அழிளாதொழியான் நமக்கு" (மணிவாசகர்)

★ இவை தமிழ்வேதம்; சாசுவதமானவை.
★ 1967 இல் பாலஸ்தாபனம். 1982இல் குடமுழுக்கு. இடையில் பதினான்கு ஆண்டுகள். ஆவரங்கால் மக்கள் அருந்தவம். பயன் பெருஞ்சாந்தி விழாக்கண்டோம். மனதுக்குப் பெருஞ்சாந்தி.
★ 1982 இன் பின் 1995 வரை பதின்மூன்று ஆண்டுகள் மீண்டும் ஆவரங்கால் மக்கள் தவம். பயன் புதிய சித்திரத்தேர்.
★ 28-6-95 புதன்கிழமை பெருமானுக்கே உரிய திருவாதிரைநாளில் தேர் வெள்ளோட்டம் நடைபெற அருளுகின்றார்.
★ தேர் உருவாக்க உள்ளூரிலும் வெளியூரிலும் வெளிநாட்டிலுமிருந்து அன்பர்கள் பலரும் நிதியுதவினர்.
★ தேர்த்திருப்பணிச் சபையினர் பொருள் சேர்த்துத் திருப்பணியை இனிது நிறைவேற்றினர்.
★ திருநெல்வேலிச் சிற்பச் சக்கரவர்த்தி ஆ. ஜீவரத்தினம் வழிநடத்த அவர் மகன் ஜீ. ஜெயப்பிரகாஷ் [சிற்பப் பிரகாசம்] அவர்கள் தேரை உருவாக்கினார். சிற்பர் பலர் சேர்ந்துழைத்தனர்.
★ எல்லாருடைய ஒத்துழைப்பாலும் எல்லாம் வல்ல எம் பெருமானின் திருவருளாலும் தேர் தேராயிற்று.
★ பதினான்கு வருடத்தவம் இராமராச்சியம். பதின்மூன்று வருடத் தவம் தர்மராச்சியம் சேர்ந்த இருபத்தியேழு வருடத்தவம் எங்கள் இராச்சியமாகும். நல்லரசு நடக்க நலமெலாம் பெருக.
★ நின்றாலும் இருந்தாலும் கிடந்தாலும் நடந்தாலும் மென்றாலும் துயின்றாலும் விழித்தாலும் இமைத்தாலும் மன்றாடும் மலர்ப்பாதம் ஒருகாலும் மறவாமை குன்றாத உணர்வுடையார் தொண்டராம் குணமிக்கார் என்ற அருண்மொழிப்படி இறைபணியில் விடாமுயற்சியோடு ஈடுபட்டுத் திருப்பணியை நிறைவாகக்கண்டு மனச்சாந்தி பெற்றும் பெறவைத்தும் நிற்போர் பெரியர்.
★ இவர்கள் எல்லோரதும் இணையடி எந்தலைமேலன. நன்றி இவர்கள் யாவருக்கும் எம்பிரான் திருவருள் பூரணமாக அமைக.
★ திருவருட் செல்வனின் திருப்பணியில் ஈடுபடுவோர்க்கு அவன் செல்வமாக வளர்த்திடுவான்.

ஊரும் உலகும் இனிது வாழ்க. சுபம். மங்களம்.

ஆவரங்காற்சிவன் தேவஸ்தான
தர்மகர்த்தா சபையினர்

ஆவரங்கால்,
புத்தூர்.
1995-06-28


தேர் வெள்ளோட்ட விழா
சிறப்புற வாழ்த்துகிறோம்

**வி. எஸ். பி. குறூப்**
275, ஸ்ராஸ்லி வீதி, யாழ்ப்பாணம்.

**நிரு**
**எரிபொருள் விற்பனை நிலையம்**
யாழ். பருத்தித்துறை வீதி, ஆவரங்கால்.

**ரஞ்சி அழகுமாடம்**
(அழகு சாதனப் பொருள்கள் விற்பனையாளர்)
20, சிறப்பு அங்காடி, யாழ்ப்பாணம்.

**செல்வா ஸ்ரோர்ஸ்**
யாழ். பருத்தித்துறை வீதி, ஆவரங்கால்.

**இளவரசி சேலைச் சோலை**
57, சிறப்பு அங்காடி, (உள்வளம்)
யாழ்ப்பாணம்.

**சோபியா எரிபொருள் நிலையம்**
யாழ். பருத்தித்துறை வீதி, ஆவரங்கால்.

**வரணிப் பண்ணை**
**விற்பனை நிலையம்**
145, சிறப்பு அங்காடி, யாழ்ப்பாணம்.


இருக்கு வேதத்திலே தேர் பற்றிய தகவல்கள் காணப்படுகின்றன. தேரின் பாவனை அதன் உறுப்புக்கள் பற்றிய பல விவரங்களை இருக்கு வேதம் சொல்லுகின்றது.

உபநிடதங்களிலும் தேர். தேர்ப்பாகன் பற்றிய தகவல்கள் கிடைக்கின்றன. மிகப் பழங்காலத்தில் இருந்தே தேர்ப்பாவனை, தேர்ப்பண்பாடு இருந்துவந்திருக்கின்றதென்பது தெளிவாகின்றது,

தேவர்களும், அரசர்களும். அமானுஷியர்களும், வீரர்களும் தேர்களிலே உலாவந்தமைக்கான சான்றுகளைப் புராணஇதிகாசங்களிலேகாண முடிகின்றது புராண இதிகாசகாலத்தின் மிக முக்கியமான ஊர்தியாகத்தேர் விளங்கியிருக்கின்றது.

தேரைக்குதிரைகள், யானைகள் இழுத்துச் சென்றுள்ளன. குதிரைகள்பூட்டியதேர்,என்ற தொடர் பழந்தமிழ் இலக்கியங்களிலே பலவிடங்களிலும் இடம் பெற்றுள்ளது. தேரிற் பூட்டியகுதிரைகளின் சிறப்பும், அழகும், வேகமும் இவ்விலக்கியங்களிலே விதந்து பேசப்பட்டுள்ளன.

மனிதர்கள் தாம் உபயோகித்த ஒ ' ' ' ', தாம் வணங்கும் தெய்வத்திற்குச் சமர்ப்பணம் செய்திருக்கலாம். இதனாலே காலப்போக்கில் தேர் தெய்வசம் மந்தமுடையதாக மாறியிருக்கக் கூடிய வாய்ப்பு உண்டு.

### அழிந்து போன கலைப் பொருள்கள்

தேர்கள் மரத்தினாற் செய்யப்பட்டமையினாலே அவை காலப்போக்கில் அழிந்தொழிந்து போயின — தமிழ் நாட்டின் பழைய அரசர்களின் அரண்மனைகளையோ வாழிடங்களையோ பேணிப் பாதுகாக்க முடியாமற் போனது போலவே பண்டைக்காலத்துக்கலைப் பொருட்கள் பலவற்றை (சிறப்பாக மரத்திலானவை) எமது பாரம்பரியம் பேணிப் பாதுகாக்கவில்லை. இதனால் பழந்தமிழ்க் கலைப் பொக்கிஷம் பலவற்றை நமது பண்பாடு இழந்துவிட்டது என்றே கருதவேண்டும்.

இலக்கியம் கண்டு அதற்கு இலக்கணம் அமைத்த சமூகம் பலவகைத் தேர்களையும் கண்டு பின்னர் அதற்குரிய அமைப்பு விதிகளையும், முறைமைகளையும் அறிமுகப்படுத்தியிருக்கலாம்.

சிற்பக்கலைகள் பேணிப் பாதுகாக்கப்படாமை போலவே சிற்பக்கலைஞர்களின் ஆற்றலை வெளிப்படுத்தும் வகையிலமைந்த சிற்பமுறைகள் பற்றிய விவரங்கள், அவர்களது வாழ்க்கை வரலாறுகள் தொழில் நுட்பத்திறன்கள் அழகியல் வெளிப்பாடுகள் பற்றிய தகவல்களையும் நமது இலக்கியப் பாரம்பரியம் முழுமையாகப் பேணிப் பாதுகாக்கவில்லையென்றே கருத வேண்டும்.

கோயிற் பண்பாட்டுடன் இணைந்த கலைக்கோலங்கள் பலவற்றிற்கும் இத்தகைய நிலையே காணப்படுகின்றது. எனலாம். பல்லவர் சோழர் காலங்களுக்குரியதாகப் பேசப்படும் ஒரு சில கல்வெட்டுக்கள், செப்பேடுகள் மாத்திரம் சிற்பக்கலைஞர்களுக்கு நிவந்தங்கள் வழங்கப்பட்டமையைத் தெரிவிக்கின்றன.

### மரச்சிற்பத் தேர் கல் தேரானது

மரச்சிற்பத்தேர் கல்தேராகவும் செதுக்கப்பட்டமை இக்காலப் பகுதியிலேயேயெனக் கருதலாம். மரச்சிற்பக்கலை இயற்கையாலும் செயற்கைச் சக்திகளாலும் அழிந்து போவதைக் கண்ட கலை ஆர்வலர் மரத்தேர் அமைப்பினை அப்படியே கல்லிற் செதுக்கிப் பாதுகாக்கக் கருதியிருக்கலாம். இன்றும் இந்தியாவிலே (சிறப்பாகத் திருவாரூரிலே) கல் தேர்களைக் காண முடியும். ஒரிஸா, கொன்னாரக் ஊரிலுள்ள சூரியன் கோயிற் கல்தேர் உலகப் புகழ் பெற்றது. தமிழ் நாட்டுத் தொடர்புடைய கலிங்க அரசனே இக்கல், தேரைச் செதுக்குவித்தான் என்பர்.

சிற்பக்கலை, சிறப்பாக மரச்சிற்பக்கலை தமிழ் நாட்டிலே மிகப் பழங்காலத்தில் போற்றப்பட்டு வந்துள்ளது. தமிழ் நாட்டின் சமய, சமூக, அரசியற் காரணிகள் கலைஞர்களைத் தொழிலாளர்களாகக் கணிக்கத் தொடங்கியதன் பின்னரே தமிழகக்கலைகள் நலியத் தொடங்கின எனலாம்.

'ஏவுதற்கருத்தா', இயற்றுதற் கருத்தா என்ற இறுக்கமான தமிழ் நாட்டுச் சமூக மரபு தமிழ்க்கலைகளின் வீழ்ச்சிக்கே வழிவகுத்தது எனலாம்.

### சமய சங்கமத்தில் தேர் மரபு

முற்று முழுக்கக் கலைப் படைப்பாகவும் தொழில் நுட்பத்திறனின் வெளிப் படைப்பாகவும் விளங்கிய தேர் மரபு சமயத்துடன் சங்கமமாகிச் சமயச் சார்பான ஓர் கலைவடிவமாக மெல்ல மெல்ல நிலைபெறத் தொடங்கியது. தமிழ்க்கலை வரலாற்றிலே சிற்பம், சித்திரம், இசை, நடனம் முதலிய எல்லாக் கலைகளுக்கும் சமயச் சார்புடனேயே நிலை நிறுத்தப்பட்டன எனக் கருதலாம்.

தேர் சிற்பக்கலையையும் தொழில் நுட்பத்திறனையும் உள்வாங்கி வரும் பொழுது சமயதத்துவங்களின் உறவுக்குரியதாகிச் சில தத்துவார்த்தங்களுக்கு உள்ளாகியது.

தத்தம் வசதிக்கும், வர்க்கங்களுக்கும் ஏற்பத் தத்துவம் கற்பிக்கப்பட்டமையைத் தேரின் வரலாறே துல்லியமாகக் காட்டி நிற்கின்றது.

### சிற்ப சாஸ்திர வரையறைகள்

தேரின் அமைப்பு, அளவு கணக்கு என்பன அனுபவஸ்தர்களாலும், அறிஞர்களினாலும் வரையறை செய்யப்பட்டுள்ளன.

**சிற்பச் சக்கரவர்த்தி**
**ஆறுமுகம் ஜீவரட்ணம்**
*ஆச்சாரியார்*

சைவ சமயச் சூழலில் கட்டுத்தேர், சித்திரத்தேர் எனப் பல்வேறு வகையுண்டு. இவ்வாறே முழுத்தேர், அரைத் தேர், கால்தேர் எனச் சில அளவுகளும் உண்டு.

மானசாரம் என்ற சிற்ப நூலிலே தேரிற்குரிய இலக்கணம் கூறப்பட்டிருக்கின்றது தேரின் அமைப்பு, அதன் அளவு, அதன் வேலைப்பாடுகள், அதற்குப் பயன்படுத்தப்படும் மரங்கள் முதலான பல்வேறு கருத்துக்களையும் சிற்ப சாஸ்திரங்கள் கூறிநிற்கின்றன.

தேர், இரதம் என்னும் சொற்கள் இன்று ஒருபொருட் குறிக்கும் சொற்களாகக் கருதப்படுகின்றன. சிற்ப சாஸ்திர விதிப்படி, தேர் வேறு. இரதம் வேறு. மஞ்சம் வேறு. பிறவாயாக்கைப் பெரியோனாகிய சிவனுக்குப் பிள்ளைத் தமிழ்ப் பிரபந்தம் பாடுவதில்லையென்று பாட்டியல் இலக்கண நூல்கள் கூறுகின்றன. இவ்வாறே சிவனுக்குத் தேர் செய்யும் பொழுது மிகுந்த கவனத்துடன் செய்ய வேண்டும் என்று கூறுவர்.

சில்லுத் தொடக்கம், கோபுர கலசம்வரை ஒவ்வொரு தெய்வத்திற்கும் ஒவ்வொரு அளவுப் பிரமாணத்தினைச் சிற்ப சாஸ்திரத்திலே சொல்லியிருக்கிறார்கள். அழகியலமிசங்களை உள்வாங்கிய போதிலும் தேரிற் செதுக்கப்படும் சிற்பங்களுக்கும் சில அளவுப் பிரமாணங்களும் சமய நம்பிக்கைத் தன்மைகளும் பேணப்பட்டு வருவதும் அவசியமாகும்.

தேர் நிர்மாணிக்கும் இடம், திசை, அதற்குரிய மரங்களைத் தெரிவு செய்தல் என்பவற்றிலேயும் மிகுந்த கவனம் செலுத்த வேண்டும். வேலை ஆரம்பிப்பதற்குரிய நாள், திதி, நட்சத்திரம் முதலியன வற்றையும் மங்கலநாளாகத் தெரிவு செய்ய வேண்டும் என்பர். இறைவனுக்குத் தேர் இயற்றும் காலத்தில் சிற்பாசாரியர்கள் ஆசாரசீலர்களாக இருக்க வேண்டும் என்று கருதப்படுகின்றது.


### தேர் கூறும் சமூக தத்துவங்கள்

சமய தத்துவங்கள் தேர் பற்றிய பல தத்துவ விளக்கங்களைத் தருகின்றன.

தேர் என்பது ஒரு கோயிலின் அமைப்புப் போன்றது என்றும் கோயிலுக்கு வந்து வணங்கும் அடியார்களுக்காகவும், வர வசதியில்லாதவர்களுக்காகவும், அருளும் பொருட்டு 'கோயிலே' எழுந்தருளி வருவது போன்ற வகையிலே இத் தேரின் தத்துவம் அமைந்திருக்கின்றது என்று கலைக்களஞ்சியம் கூறும்.

கோயிலின் அமைப்புப் போன்ற தேரின் அடிப்பாகம் பூலோக வாழ்க்கையும், [5ஆம் பக்கம் பார்க்க]

ஒவ்வொரு சுவாமிகளுக்கும் அமையவேண்டிய
சித்திரத் தேர் அமைப்பின் கிடைப்படங்கள்





**ஞானசுந்தரம்**
**பலசரக்கு விற்பனை நிலையம்**
அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி.

தேர் வெள்ளோட்ட விழா
சிறப்புற வாழ்த்துகிறோம்

**யாழ்ப்பாண மின்னகம்**
[94] 6, அருச்சனா வீதி, யாழ்ப்பாணம்.

**சந்திரன்**
**எரிபொருள் விற்பனை நிலையம்**
யாழ். பருத்தித்துறை வீதி, ஆவரங்கால்.

**★ நாதன்ஸ் ★**
17A, நவீனசந்தை, யாழ்ப்பாணம்.

**அருளாம்பிகை சுவையகம்**
யாழ். பருத்தித்துறை வீதி, ஆவரங்கால்.

**★ துணிப்பூங்கா ★**
158, நவீனசந்தை, யாழ்ப்பாணம்.

**வேல் மயில் வெதுப்பகம்**
யாழ். பருத்தித்துறை வீதி, ஆவரங்கால்.

**அபிராமி புடைவை அகம்**
155, சிறப்பு அங்காடி
இராசன் தெரு (மின்சார நிலைய வீதி),
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
292/2 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்

## அடித்து மூடப்படும் கதவுகள்

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பை தடை செய்வது குறித்து சந்திரிகா அரசாங்கம் மிகத் தீவிரமாக ஆராய்ந்து வருவதாகச் செய்திகள் வந்துள்ளன.

புலிகளைத் தடைசெய்வதால் ஏற்படக்கூடிய பின் விளைவுகளைச் சிந்திக்காமல், தடை செய்வதில் உள்ள சட்டச் சிக்கல்கள் குறித்தே, அரசாங்கம் தலையைப் பிய்க்கிறது.

இந்தச் சட்டச் சிக்கல்களைத் தாண்டுவதற்கு ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவைப் பெறுவதில் அரசு மும்முரமாகச் செயற்படுகிறதாம்.

விடுதலைப் புலிகளைப் பலவீனப்படுத்துவதற்கு அவர்களின் ஆயுத பலத்தைக் குறைக்க வேண்டும். வெளிநாடுகளில் வாழும் தமிழர்களிடம் இருந்து புலிகளுக்குக் கிடைக்கும் பணத்தைத் தடுத்தால் விடுதலைப் புலிகளின் ஆயுதக் கொள்வனவு வலுவைக் குறைத்துவிடலாம். வெளிநாடுகளைக் கொண்டு அந்தந்த நாடுகளில் விடுதலைப் புலிகளைத் தடை செய்வித்தால் அது சாத்தியம் என்றொரு உபாயத்தை அரசு வகுத்தது.

ஆனால், ஸ்ரீலங்காவில் விடுதலைப் புலிகளைத் தடை செய்யாமல், தம்மால் அவ்வாறு செய்யமுடியாது என்று ஐரோப்பிய நாடுகள் பலவும் வெட்டு ஒன்று துண்டு இரண்டாகத் தெரிவித்து விட்டன.

அதுவே ஸ்ரீலங்காவில் விடுதலைப் புலிகளை அவசர அவசரமாகத் தடை செய்ய வேண்டும் என்ற உந்துதலை சந்திரிகாவுக்குக் கொடுத்திருக்கிறது எனலாம்.

ஆனால் விடுதலைப் புலிகளுடனான சமாதானப் பேச்சுக்களை முறித்துக் கொள்வதற்கு திட்டமிட்டு இராணுவ நகர்வுகளைப் பேண முடிவு செய்த வேளையிலேயே, புலிகளைத் தடை செய்தால் மட்டுமே அவர்களைப் பலவீனப்படுத்தலாம் என்று சந்திரிகா கணக்குப் போட்டிருப்பார்!

ஏப்படியோ —

விடுதலைப் புலிகள் அமைப்பைத் தடைசெய்வதன்மூலம், இனப்பிரச்சினைக்கு சமாதானத் தீர்வு காணும் சகல வாய்ப்புகளும் அடைக்கப்படும் என்பது எவருக்கும் புரியும். நீண்டகால தமிழர் பிரச்சினைக்கு சமாதானத் தீர்வுக்கான கதவுகள் அடித்து மூடப்படுகின்றன என்பதே அர்த்தம்.

அதாவது முழுக்க முழுக்க இராணுவத் தீர்வு ஒன்றின் மூலமே இனப்பிரச்சினையை முடிவுக்குக் கொண்டுவர சந்திரிகா தீர்மானித்துவிட்டார். தமிழ் மக்களை அழிப்பதன் மூலம் அவர்களது பிரச்சினையை இல்லாமற் செய்துவிடலாம் என்று மிக இலேசாக நினைக்கிறார் போலும்!

இராணுவத்துக்கு ஆயுதங்களை வாங்கிக் கொடுத்தால் விடுதலைப் புலிகளை நசுக்கி விடலாம். விடுதலைப்புலிகளை பலவீனப்படுத்தி விட்டால் தீர்வு ஒன்றைத் திணிக்கலாம் என்ற சந்திரிகாவின் தப்புக்கணக்கு அவரை அரசியல் பாதாளத்துக்குத் தள்ளிவிடும். இராணுவத் தீர்வு என்ற போதையில் மூழ்கியவரை மதியக்கத்தில் இருந்து மீட்பது கடினமே!

சிங்கள தேசம், தமிழ் தேசம் ஆகிய இரண்டையும் கொண்டது தான் இலங்கை. இந்த உண்மையை ஏற்க மறுக்கும் எவராலும் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண முடியாது என்பது நிச்சயம். அவர்கள் இராணுவத் தீர்வையே நாடுவதும் இயல்பு.

இப்போது வடக்கில் விடுதலைப் புலிகளின் ஆட்சி நடக்கிறது என்பது யதார்த்த நிலை. கிழக்கின் ஆட்சியைப் பிடிப்பதற்கும் அவர்கள் போரிடுகிறார்கள்.

இந்த நிலையில் விடுதலைப் புலிகளை அரசு தடை செய்தால், தமிழீழத்தைப் பிரகடனம் செய்வது ஒன்றே பதிலடியாக அமையும். தமிழீழத்தை அங்கீகரிக்க வெளிநாடுகள் ஆரம்பத்தில் பின் நிற்கலாம். ஆனால் தமிழீழத்தைப் பேணிக் காக்கும் பலத்தைத் தமிழர்கள் பெறும்போது நாளடைவில் தமிழர் தேசம் நிலைபெற்று விடும். தமிழீழப் பிரகடனம் செய்யும் வேளை தமிழர்கள் பல கஷ்டங்களை அனுபவிப்பது தவிர்க்க முடியாதது. விடுதலையோடு கஷ்டங்களை ஒரே தட்டில் போட்டு எடை பார்க்க முடியாது; பார்க்கவும் கூடாது.

# அடுத்துவருர் வாரங்களில் அரசுக்கு பெரும் நெருக்கடி

## ஜேர்மன் வானொலிக்கு லூசியன் பேட்டி

கொழும்பு, ஜூன் 28

தற்போதைய நிலையில், சந்திரிகா அரசு அடுத்த மூன்று வாரங்களில் பெரும் அரசியல் நெருக்கடியை எதிர்நோக்கி உள்ளது. ஸ்ரீலங்காவில் ஏற்கெனவே விடுதலைப் புலிகளினால் உருவாக்கப்பட்டுள்ள நெருக்கடியைவிட இது மோசமானதாக இருக்கும்.

பத்திரிகையாளர் லூசியன் ராஜகருணநாயக்கா ஜேர்மன் வானொலிக்கு அளித்த பேட்டியில் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

நிறைவேற்று ஜனாதிபதி ஆட்சிமுறை வாக்குறுதி அளித்த திகதியில் ரத்துச் செய்யப்பட வேண்டும் என்று ஜே.வி.பி வலியுறுத்தத் தொடங்கியுள்ளது.

ஜூலை 15இல் நிறைவேற்று ஜனாதிபதி ஆட்சி முறையை இல்லாது செய்வதாக 1994 நவம்பர் ஜனாதிபதித் தேர்தலின் போது சந்திரிகா வாக்குறுதி அளித்திருந்தார்.

இப்படியான வாக்குறுதிகளால் தேர்தலில் அவர் முன்காணாத விதத்தில் 62 சதவீத வாக்குகளைப்பெற்றார்.

நிறைவேற்று ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிப்பது உட்பட அரசமைப்பு மாற்றங்களைச் செய்வதற்குத் தேவையான மூன்றில் இரண்டு பெரும்பான்மை அரசாங்கத்துக்கு நாடாளுமன்றத்தில் கிடையாது.

இனப்பிரச்சினைக்கான தீர்வுடன் சேர்த்து நிறைவேற்று ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிக்க அரசாங்கம் முயற்சித்தது.

ஆனால் விடுதலைப் புலிகளுடன் சண்டை மீண்டும் ஆரம்பித்துள்ள நிலையில் புலிகளை ராணுவரீதியில் தோற்கடிக்கும்வரை அரசியல் தீர்வு எதையும் முன்வைக்கக் கூடாது என்று சிங்கள அரசியல் கட்சிகள் கூறுகின்றன.

புலிகளுடனான யுத்தம் முடிவடையும் வரை நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழிப்பதையும் அரசியல் தீர்வை வெளியாக்குவதையும் பின்போட வேண்டும் என்று புத்த பிக்குமாரும் சிங்களக் கல்விமான்களும் கோருகின்றார்கள்.

அரசியல் தீர்வை வெளியிடுவதற்கு எதிரான பேரியக்கம் ஒன்று தோன்றியுள்ளபடியும் விடுதலைப் புலிகளுக்கு எதிரான [illegible] தொடங்குவதற்கு முன் அரசியல் தீர்வு ஒன்றை முன்வைக்க அரசு உறுதிபூண்டிருப்பதாகத் தெரிகிறது.

இப்படி அவர் மேலும் தெரிவித்தார். (இ-க)

# விலகிச்சென்ற 24,000 படையினரில் 2,500பேரே மீண்டும் வந்து இணைவு

## அரசின் கால அவகாசம் திங்களுடன் முடிவு

கொழும்பு, ஜூன் 28

ஸ்ரீலங்கா ராணுவத்திலிருந்து விலகிச் சென்றவர்களில் 2 ஆயிரத்து 500 பேர் மீண்டும் திரும்பி வந்து ராணுவத்தில் இணைந்துள்ளனர் என்று கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

கடந்த காலங்களில் 24 ஆயிரம் பேர் ராணுவத்திலிருந்து சொல்லிக் கொள்ளாமல் விலகிச் சென்றிருந்தனர்.

இவர்களை மீண்டும் வந்து சேர்ந்து கொள்ளும்படியும் — முன்னர் விலகிச் சென்றதுக்காக இவர்களுக்கு தண்டனை வழங்கப்படமாட்டாது என்றும் அரசு அறிவித்திருந்தது.

இப்படியானவர்கள் மீண்டும் திரும்பி வந்து ராணுவத்தில் இணைந்து கொள்வதற்கு இம்மாதம் 20 ஆம் திகதி வரை அவகாசமும் வழங்கப்பட்டிருந்தது.

எதிர்பார்த்த பலன் கிடைக்காதபடியால் இந்தகால அவகாசம் இம்மாதம் 26 ஆம் திகதி வரை பின்னர் நீடிக்கப்பட்டது.

கால அவகாசம் நீடிப்புக்குப் பின்னரும் 2 ஆயிரத்து 500 பேர் மட்டுமே மீண்டும் வந்து ராணுவத்தில் இணைந்து கொண்டிருப்பதாக கொழும்புப்பத்திரிகைச் செய்தி தெரிவிக்கிறது. [இ-க]

## மாநகரசபை ஆணையாளருக்கு மகஜர்

யாழ்ப்பாணம், ஜூன் 28

பாஷையூரில் நிலவும் குறைபாடுகள் பற்றி எடுத்துக் கூறும் மகஜர் ஒன்றை பாஷையூர் புனித அந்தோனியார் மக்கள் முன்னேற்ற சனசமூக நிலையம் யாழ். மாநகரசபை ஆணையாளருக்கு அனுப்பியுள்ளது.

வடிகால் கழிவுகள் மேற்படி சனசமூகநிலையத்துக்கு முன் குவிக்கப்படுவதாகவும்—

யூனிசெவ் மூலம் அமைக்கப்பட்ட மலசலகூடக் குழிகள் மூன்று ஆண்டுகளாகத் திருத்தப்படாமல் இருப்பதாகவும்—

இன்னும், வடிகால்கள் மதகுகள், வீதிகள் ஆகியன திருத்தப்படாமல் இருப்பதாகவும் மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது. (க)

## பாலர் பூங்கா திறப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 28

வல்வெட்டித்துறை நெடியகாடு கணபதி பாலர் பாடசாலையின் பாலர் பூங்கா திறப்பு விழா இன்று மாலை 5 மணிக்கு திரு கு. சேகுலநாயகம் தலைமையில் நடைபெறும். (5-30)

## உருவப்பட திரைநீக்கம்

யாழ்ப்பாணம், ஜூன் 28

கடந்த ஆறாம் திகதி மாதகல் சில்லாலைப் பகுதியில் ஸ்ரீலங்கா இராணுவத்துடனான நேரடி மோதலில் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட லெப்டினன்ட் ஒப்பிலான் அல்லது ஆர் பி.ஜீ. சுதன் (சேனாதிராஜா நாகேந்திரராஜா — சண்டிலிப்பாய் வடக்கு) அவர்களின் திருவுருவப் படம் இன்று மாலை 4 30 மணியளவில் சண்டிலிப்பாய் தொட்டிலடிச் சந்தியில் எழுச்சி பூர்வமாகத் திறந்து வைக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## சித்த ஆயுள்வேத வைத்தியசாலை

வலி. மேற்கு பிரதேச செயலக வட்டுக்கோட்டை உப அலுவலகத்தில் வட்டுக்கோட்டை சித்த ஆயுர்வேத இலவச வைத்தியசாலை திங்கள், புதன், வெள்ளி ஆகிய தினங்களில் இயங்குகிறது. (க-161)

# தொழில் வங்கி மீண்டும் ஜூலை முதல் இயங்கும்

யாழ்ப்பாணம், ஜூன் 28

சிறிது காலம் இடைநிறுத்தி வைக்கப்பட்ட தொழில் அதிரோசர, தொழில் வங்கியில் பதிவு செய்யும் வேலைகள் எதிர்வரும் முதலாம் திகதி தொடக்கம் மீண்டும் ஆரம்பமாக உள்ளதாக, யாழ் மாவட்ட தமிழீழ நிர்வாக சேவைப் பொறுப்பாளர் அறிவித்துள்ளார்.

விண்ணப்பம் சமர்ப்பித்தோரில், இதுவரை பதிவு அட்டையைப் பெற்றுக் கொள்ளாதோர் எதிர்வரும் ஜூலை மாதம் 15 ஆம் திகதிக்கு முன் தமது பிறப்பு அத்தாட்சிப் பத்திரம், கல்வித் தகைமைச் சான்றிதழ்கள், பாடசாலை விலகல் சான்றிதழ். அனுபவச் சான்றிதழ். அடையாள அட்டை, குடும்ப அட்டை ஆகியவற்றை காண்பித்து பதிவு அட்டையை பெற்றுக் கொள்ளலாம் என்றும் —

புதிதாக விண்ணப்பப்படிவம் பெறுவோர் ஜூலை 15க்குப் பின்னர், சனி, ஞாயிறு, புதன் ஆகிய நாள்கள் தவிர்ந்த ஏனைய நாள்களில் காலை 9-00 மணிக்கும் 12-30 மணிக்கும் இடைப்பட்ட நேரத்தில், 10 ரூபாவை செலுத்தி விண்ணப்பத்தை பெற்றுக் கொள்ளலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

## ஜனாதிபதி ஆட்சி முறை ஒழிப்பு:

# ஸ்ரீமுனியின் கட்சி மேலும் மூன்று மாதம் வழங்கும்

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறையை எதிர்வரும் ஜூலை 15ஆம் திகதிக்கு முன்னர் ஒழிக்க முடியாது விட்டால் அதனை ஒழிப்பதற்கு அத்தினத்திலிருந்து மூன்று மாத காலத்துக்கு அவகாசம் வழங்குவதென அமைச்சர் ஸ்ரீமனி அத்துலத்முதலி தலைமையில் இயங்கும் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி (லலித்குழு) முடிவு செய்துள்ளது

நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி ஆட்சி முறை ஒழிக்கப்பட வேண்டும் என்பதில் ஸ்ரீமனி அத்துலத்முதலி உறுதியாக இருந்து வருகிறார் என தெரிவிக்கப்படுகிறது [இ-10]

# நல்லூர் கந்தன் உற்சவம் பற்றிய கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜூன் 28

எதிர்வரும் ஓகஸ்ட் 1 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள நல்லூர் ஸ்ரீ கந்தசுவாமி ஆலய வருடாந்த மகோற்சவம் தொடர்பான ஏற்பாடுகளை மேற்கொள்வது சம்பந்தமான கூட்டம் ஒன்று இன்று பிற்பகல் 2-30 மணிக்கு பண்டார மாளிகை வளவில் அமைந்துள்ள யாழ் மாநகராட்சி மன்ற ஆணையாளர் பணிமனையில் நடைபெறும்.

மாநகராட்சிமன்ற ஆணையாளர் தலைமையில் நடைபெறும் இக் கூட்டத்திற்கு யாழ். மாவட்ட இந்துப் பேரவையினர், தமிழீழ காவல்துறையினர், சாரணர்கள், செஞ்சிலுவைச் சங்கத்தினர் சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் சங்கத்தினர் ஆகியோரும் அழைக்கப்பட்டுள்ளனர். (இ-5-80)

# பத்திரிகை சுதந்திரத்துக்கு இலங்கையில் அச்சுறுத்தல்

## சர்வதேச சம்மேளனம் கவலை

கொழும்பு, ஜூன் 28

சர்வதேச புதினப்பத்திரிகை பிரசுரகர்த்தாக்களின் சம்மேளனம், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு அனுப்பிய கடிதம் ஒன்றில், ஸ்ரீலங்காவில் பத்திரிகைச் சுதந்திரத்துக்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தல் பற்றிக் கவலை தெரிவித்துள்ளது.

'இனப் பிரச்சினை' தொடர்பான செய்திகள் வெளியிடுவதை ஒட்டி ஸ்ரீலங்கா அரசாங்கம் கட்டுப்பாடுகளை விதிக்கலாம் எனவும் —

இனரீதியான நோக்குடைய விஷயங்களைப் புதினப் பத்திரிகைகள் பிரசுரித்தால் பத்திரிகைத் தணிக்கையை மீண்டும் அமுல் படுத்த நேரிடும் என்று தகவல் அமைச்சர் அண்மையில் அறிவித்தார் எனவும் மேற்படி சம்மேளனம் வட்டாரங்கள் தெரிவித்தன (இ-க)

# மாணவியை பின்தொடர்ந்த இரண்டு இளைஞர் கைது

கல்லூரி மாணவிகளுக்கு வீதிகளில் நின்று தொல்லை கொடுப்பது நகரத்திலிருந்து கிராமப்பகுதிகளுக்கும் பரவத் தொடங்கியுள்ளது.

அண்மையில் சங்கானையில் இத்தகையதோர் சம்பவம் நிகழ்ந்தது.

கல்லூரிக்குச் செல்லும் வழியில் மாணவி ஒருவரை பின் தொடர்ந்து தொல்லை கொடுத்து வந்ததாகத் தெரிவிக்கப்பட்ட முறைப்பாட்டை அடுத்து சங்கானை காவல் துறையினர் சண்டிலிப்பாய் சந்திக்கருகில் வைத்து இரு இளைஞர்களை மடக்கிப் பிடித்து கைது செய்தனர்.

மேற்படி இரண்டு இளைஞர்களும் கைது செய்யப்பட்டு விசாரணைக்காக கூட்டிச் செல்லப்பட்டனர். [illegible] சண்டிலிப்பாய் [illegible] நின்று நேரடியாக கண்டனர். (க-135)

## புலிகளின் குரல் வானொலியில்

28 - 06 - 1995

புதன் இரவு

★ 8-02 — குலசேகர நிகழ்ச்சியில் தமிழ் கவி எழுதிய 'நேற்றிலிருந்து இன்றுவரை' கிராமிய நிகழ்வு
★ 8-20 — வாத்தியகானங்கள்
★ 8-30 — செய்திகள்
★ 8 40 நாடகம் ரவி எழுதிய ''விளையும் விளைவும்''

29 - 06 - 1995

வியாழன் காலை

★ 7-02 — மாவீரர் வணக்கம்
★ 7-15 விடுதலை கீதங்கள்
★ 7-30 — செய்திகள்
★ 7-35 — பத்திரிகைச் செய்திகள், விடுதலை கீதங்கள் நிகழ்ச்சியின் தொடர்ச்சி

## தமிழீழ வானொலியில்

புதன் மாலை

★ 5-01 — சிந்தனைச் சிதறல்
★ 5-02 — எழுச்சிகீதம்
★ 5-10 — புதியவை
★ 5-15 — பட்பாடல்கள்
★ 5-30 — அறிவூற்று
★ 6-00 — சிந்தனைக்குச் சில விநாடிகள்
★ 6-02 — உங்கள் தெரிவு
★ 6-15 — விளையாட்டுச் செய்திகள், உங்கள் தெரிவு

## ஆங்கில தின விழா

மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலய ஆங்கில தின விழா இன்று புதன்கிழமை பகல் 1-00 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் அதிபர் க. பொ. செல்லையா தலைமையில் நடைபெறும்.

## பண்டிதமணி நினைவு பேருரை

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை நினைவுக்காப்பு நிதியம், யாழ். பல்கலைக்கழக இந்து மன்றத்தின் அனுசரணையுடன் நடத்தும் பண்டிதமணி நினைவுப்பேருரை இன்று புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் பேராசிரியர் கா. சிவத்தம்பி தலைமையில் நடைபெறும்.

யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை தலைவர் பேராசிரியர் ப. கோபாலகிருஷ்ணன் ''சைவசமய மரபில் ஆகமங்கள்'' என்ற பொருளில் உரை நிகழ்த்துவர். (இ-5)

## விளையாட்டு நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜூன் 28

யாழ் மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழு நடத்தி வரும் பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் இன்று மாலை நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு!

இணுவில் சந்தை மைதானத்தில் நடைபெற்று வரும் ஆண்களுக்கான தாச்சிச் சுற்றுப் போட்டியில் —

★ 3-30 மணி; அரியாலை காந்தி அணி எதிர் கலட்டி கலைவாணி அணி

★ 4 30 மணி: சுன்னாகம் கலைவாணி அணி எதிர் கைதடி குமர்நகர் அணி.

சாவகச்சேரி நகரசபை பொது மைதானத்தில் நடைபெறும் தென்மராட்சி வலய உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் —

★ 3 00 மணி: ஒலிம்பிக் அணி எதிர் தேவகி அணி,

★ 4-00 மணி: ரேகா அணி எதிர் வளர்மதி அணி.

நெல்லியடி ம. ம வி. மைதானத்தில் நடைபெறும். வடமராட்சி வலய உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் —

★ 3-30 மணி: பருத்தித்துறை ஐ வி க. அணி எதிர் உடுப்பிட்டி ஐ. வி. க. அணி.

★ 4-30 மணி: வல்வெட்டி ஒற்றுமை அணி எதிர் சிவானந்தா அணி.

வலி. கிழக்கு வலய உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் பாசையூர் சென் அந்தனீஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறும் விலகல் முறையிலான ஆட்டங்களில் —

★ 4 00 மணி: சென். றோக்ஸ் அணி எதிர் நீர்வேலி வளர்மதி அணி.

★ 5 00 மணி: அண்ணா ஸ்டார் அணி எதிர் ஸ்ரீ வாகீஸ்வரி அணி.

★ ★ ★

காங்கேசன்துறை யங் றோயல் கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று மாலை உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும். இரண்டாம் சுற்று ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் வருமாறு:

★ 3-30 மணி சென். அன்ரனிஸ் அணி எதிர் யங் ஹென்றீஸ் அணி

★ 4-30 மணி சென் மேரீஸ் அணி எதிர் பொற்பதி அணி.

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜூன் 28

யாழ் பல்கலைக்கழக சமூகவியல் சமூகம் நடத்தும் கருத்தரங்குத் தொடரில் — நாளை வியாழக்கிழமை மாலை 4 மணிக்கு '' சமூக சிந்தனை மரபில் இருப்பியல் வாதிகள்'' என்ற பொருளில் அருட்கலாநிதி டொமினிக் ஏ ஜோசப் கருத்துரை வழங்குவார். இந் நிகழ்வு பல்கலைக்கழக முகாமைத்துவ விரிவுரை மண்டபத்தில் நடைபெறும். [இ-5]

## இன்று

யாழ் கைதடி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை மண்டபத்தில் இன்று காலை 10. மணிக்கு பாடசாலை தமிழ்த் திறன் விழா பாடசாலை அதிபர் திரு.இ.செ. பத்மநாதன் தலைமையில் இடம்பெறும்.

பிரதம விருந்தினராக தென்மராட்சி உதவிக்கல்விப் பணிப்பாளர் திரு. நா. சத்தியநாதனும், சிறப்பு விருந்தினராக திரு க. அருணமாஸ்டரும் கலந்து கொள்வார்கள். [உ-30]

## சமயத்துடன்.....

(4 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மேற்பாகம் சுவர்க்க வாழ்க்கையையும் சித்திரிக்கின்றது என்று கூறுகின்றனர்.

பனிதனின் தேகத்தை உருவகிக்கும் ரீதியில் தேர் அமைந்துள்ளது எனவும் அதன் சிங்காசனமே மனித இருதயத்தின் பிரதியமிசம் எனவும் கூறப்படுகின்றது.

ஆலயங்களில் நிகழும் தேர் விழா சம்காரத்தைக் குறிப்பதாகவும் கூறப்படுகின்றது.

மேற்காட்டியவாறு பல வகையான தத்துவங்களையும் தேர் பற்றியும், தேர் விழா பற்றியும் கொண்டிருந்த போதிலும் ஓர் சமூகவியற் காரணியும் உண்டு எனக்கருதலாம். தேர் மிகவும் பெரியதாக இருப்பதால் ஊரவர்கள் யாவரும் ஒன்று திரண்டு தேரிழுப்பர். 'ஊரெல்லாம் கூடி ஒரு தேர் இழுக்கும்' பொழுது கோயிற் கடமைகளில் பார்வையாளர்களாக இல்லாமல் அனைவரும் பங்காளர்களாக மாறுகின்றனர். சமூக ஒற்றுமையின் வெளிப்பாடாகவும், ஒரு பொதுக்கருமத்தில் எல்லோரும் பங்காளர்களாக மாற வேண்டும் என்ற சமூகத்தத்துவத்தினையும் தேர்த்திருவிழா எடுத்தோதுகின்றது எனலாம்.

குதிரைகள் இழுத்த தேரின் வரலாற்றை சிற்பத்தால் செதுக்கப்பட்ட குதிரைகள் பூட்டப்பட்டுள்ளமை தெளிவாக்குகின்றது. கிராமமே கூடி இழுக்கும் பொழுது ஓர் ஒற்றுமையுணர்வு பக்திப் பாரம்பரியத்தினூடு புலப்படுவதை அவதானிக்கலாம்.

*சிற்பியின் வீதி உலா சடங்கு*

ஆலயங்களில் தேர் செய்து இறைவனை ஏற்றி உலாவருவதற்கு முன் அத்தேரினை நிர்மாணித்த சிற்பியை அத்தேரிலே ஏற்றி வீதியுலாவாக இழுத்து வருவர் இது இன்று ஒரு சடங்காசாரமாகக்கருதப்படுகின்றபோதிலும், இதில் மூன்று முக்கிய அம்சங்கள் அடங்கியிருக்கின்றன என்று கருதலாம் அவையாவன:

(அ) விஷ்வகர்மா உன்னிட்ட தேவர்களுக்குத் தேரினைச் சமர்ப்பணம் செய்தலும், அவர்களுக்குப் பிரியமான சடங்காசாரங்களை நிகழ்த்துதலும்.

(ஆ) தேரை நிர்மாணித்த சிற்பியை, சிற்பக் கலைஞர்களைக் கௌரவித்தல்.

(இ) தேர் நல்லமுறையில் அமைந்துள்ளதா, சரியாக ஓடக்கூடிய நிலைமையில் உள்ளதா என்பதைப் பரீட்சித்துப் பார்த்தல்.

இம் மூன்று காரணிகளையும் விட வேறு காரணிகளும் இருக்கலாம். ஆனால் இன்று தேர் வெள்ளோட்டம்என்பது ஒரு சடங்காகவும் மாறிவருகின்றமையையும் அவதானிக்கலாம்.

தேர்க்கலை ஒரு கூட்டுக்கலை. இதிலே பஞ்சகம்மாளர் என்று கூறப்படும் ஐவகைக் கலைஞர்களும் சிறிதும் பெரிதுமான பங்களிப்பினைச் செய்வர். அத்துடன் இன்று சைத்திரிகர்கள் எனப்படும் ஓவியர்களின் கைவண்ணத்தினையும் சித்திரத்தேர்கள் பெற்றுத்திகழுகின்றன.

*சிறந்த கலைப்படைப்புக்கு*

தமிழ் ஈழத்திலே தலைசிறந்த சித்திரத்தேர்கள் உருவாகியுள்ளன. இன்னும் அறிய வேண்டிய பலவுள என்ற எண்ணப்பாங்குடன் சிற்பக்கலைஞர்கள் செயற்பட வேண்டும். அவ்வாறு செயற்பட்டால் மிகச் சிறந்த கலைப்படைப்புக்களைத் தமிழ் ஈழம் காணும்.

தகவல்களுக்காகப் பின்வரும் சில விபரங்களைக் கீழே தருகின்றோம்.

மாவிட்டபுரச் சிற்பக் கல்லூரி அதிபர் சிற்பவல்லுநர் ஸ்தபதி உயர் திரு. வை. கணபதி அவர்களின் ஆய்வுப்படி:

பிள்ளையாருக்கு: 7'- 8'' - 9' - 1'' (காக்பிரவாய்-கர்ப்பக் கிரகம்)

முருகனுக்கு: 9' - 4'' 8' - 9''

அம்மனுக்கு: 9' - 4'' 9' - 5'' - 11' - 3''

சிவனுக்கு: 9' - 3'' 10' - 7'' - 11'' - 5''

வைரவருக்கு: 7' - 1'' - 8' - 3'' - 9' - 3''

மேற்காட்டியவாறு அளவுகள் அமைந்தால் மக்களுக்கு, நாட்டுக்கு, ஊருக்கு மிகவும் உத்தமம் என்று ஆய்வாளர் ஸ்தபதி குறிப்பிடுவர். அந்த அளவுப் பிரமாணப்படியே எமது சிற்பாலயத்தினால், திருக்கேதீஸ்வரத் தேர், பஞ்சரதங்களும் திருநெல்வேலிச் சிவன்தேர், இணுவில் சிவகாமியம்மன்தேர் முதலியனவும் நிர்மாணிக்கப்பட்டன. இதன்படியே ஆவரங்கால் சிவன்கோயில் தேரும், வல்வெட்டி வேவில் பிள்ளையார் தேரும் நிர்மாணிக்கப்படுகின்றன. தேர்த்திருப்பணி — ஒரு தெய்வீகப்பணி. ★

## என்று தணியும் எங்கள் ஆவல்!

தாய்மதலே தவநபிலைத் தலத்தின் பேறே!
தனித்தநறும் அருட்சுவையே சக்தி ஊற்றே!
ஆய்பொருளே ஆரமுதே அறத்தின் பாகே!
ஆர்ப்பரிக்கும் ஆழ்கடலின் ஆணி முத்தே!
வாய்மொழியே வல்லபியே வரத்தை அள்ளி
வழங்கிவரு நாசிமுல் வதியும் தேனே!
சேயடியோம் உன்திருமுன் வந்து போற்றும்
திருநாளை வெகுநாளாய் வேண்டி நின்றோம்.

— நா. க. சண்முகநாதபிள்ளை.

[நயினாதீவு நாகபூஷணி அம்மன் வருடாந்த [illegible] கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.]

## வெள்ளோட்ட நிகழ்ச்சிகள்

நேரம்: காலை 8-30 மணி
தலைவர்: பண்டிதர் [ச. சுப்பிரமணியம்
பிரதம விருந்தினர் உரை: பேராசிரியர் ப. கோபாலகிருஷ்ணன்
கலைஞர்கள் கௌரவிப்பு
சித்திரத் தேர் சிறப்பு மலர் வெளியீடு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆலயங்களில்

சாவகச்சேரி கெற்பலி வல்லிபக்கன் ஆலய வருடாந்த பொங்கல் உற்சவம் இன்று புதன்கிழமை இரவு நடைபெறும். (இ-31)

★ ★ ★

பொலிகண்டி கந்தவன ஸ்ரீ சுப்பிரமணியர் ஆலய வருடாந்த மகோற்சவம் இன்று புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

தொடர்ந்து எதிர்வரும் 11 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தேரும் மறுநாள் தீர்த்தமும் இடம்பெறும். (இ-155)

★ ★ ★

கொடிகாமம் கச்சாய செண் பீற்றேர்ஸ் தேவாலய நவநாள் உற்சவம் கடந்த 20 ஆம் திகதி முதல் நடைபெற்று வருகின்றது.

இன்று புதன்கிழமை இரவு 7மணிக்கு திருநற்கருணை ஆராதனையும் திருப்பலி பூஜையும் நடைபெறும்.

நாளை காலை 7 மணிக்கு திருநாட்பாடற் பலிபூஜையும் திருச்சொருப பவனியும் இடம்பெறும். (இ-117)

★ ★ ★

ஆவரங்கால் நடராஜ ஆலய புதிய சித்திரத்தேர் வெள்ளோட்டம் இன்று புதன்கிழமை காலை 8-30 மணிக்கு நடைபெறும். (இ-155)

★ ★ ★

உரும்பிராய் ஓடையம்பதி கற்பக விநாயகர் ஆலய வருடாந்த உற்சவம் இன்று 28 ஆம் திகதி முற்பகல் 11 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. தொடர்ந்து 15 நாட்கள் உற்சவம் நடைபெறும். (க)

★ ★ ★

இணுவில் ஸ்ரீ கந்தசுவாமி கோவில் வருடாந்த உற்சவம் திருக்கலியாணம் திருவிழா இன்று மாலை 4.00 மணிக்கு வசந்த மண்டபப் பூசையை அடுத்து நடைபெறும். (ஐ30)

## அதிபர்கள் கருத்தரங்கு

தென்மராட்சி கல்விக் கோட்டப் பாடசாலைகளின் அதிபர்களுக்கான கருத்தரங்கு இன்று 28 ஆம் திகதி பிற்பகல் 8 மணிக்கு சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி மண்டபத்தில் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி புஷ்பா கணேசலிங்கம் தலைமையில் நடைபெறும். [க-117]

★ ★ ★

யாழ்ப்பாணம், நல்லூர் கல்விக் கோட்டங்களைச் சேர்ந்த பாடசாலைகளின் அதிபர்கள் கூட்டம் நாளை வியாழக்கிழமை பிற்பகல் 8-30 மணிக்கு கோட்டப் பணிமனையில் கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. த. துரைசிங்கம் தலைமையில் நடைபெறும். இலங்கை ஆசியர் சேவையில் உள்ளீர்க்கப்பட்டோருக்கான கடிதங்கள் இக் கூட்டத்தில் பாடசாலை அதிபர்களிடம் கையளிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. (உ)

## நாளை

யாழ். பல்கலைக்கழக சமூக விஞ்ஞான மன்றத்தினரால் தயாரிக்கப்பட்ட—உதவி விரிவுரையாளர் திரு சி. ஜெயசங்கரின் — ''தீ சுமந்தோர்'' நாடகம் பற்றிய கருத்துக் கலந்துரையாடல் நாளை மாலை 4.00 மணிக்கு யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ மண்டபத்தில் இடம்பெறும்.

# ஈ.பி.டி.பிக்கு ஆயுதம் அரசு வழங்குகிறது!

மணிலா, ஜூன் 28

இலங்கையில் விடுதலைப் புலிகளை எதிர்த்துப் போரிட ஈழமக்கள் ஜனநாயக முன்னணிக்கு (ஈ.பி.டி.பிக்கு) ஸ்ரீலங்கா அரசு ஆயுத உதவி வழங்கியுள்ளது என வெரித்தாஸ் வானொலி அறிவித்தது.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான கருத்துக் கொண்ட ஈ.பி.டி.பி. குழுவின் ஆதரவை ஜனாதிபதி சந்திரிகா முதல் முறையாக கோரியுள்ளதுடன், புலிகளை எதிர்த்துப் போரிட ஸ்ரீலங்கா அரசப் படைகளுக்கு உதவுமாறும் அந்தக் குழுவை வேண்டியுள்ளார் எனவும் வெரித்தாஸ் வானொலி குறிப்பிட்டது.

### பருத்தித்துறை ஆஸ்பத்திரியில்

# 7 லட்சம் ரூபா செலவில் கழிவுகளை அகற்ற திட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 26

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் மனிதக் கழிவுகளை அகற்றும் 7 லட்சம் ரூபா செலவிலான தற்காலிக செயற்திட்டம் தற்போது செயற்படுத்தப்பட்டு இன்னும் ஒரு மாத காலத்தில் இத் திட்டம் பூர்த்தியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மேற்படி வைத்தியசாலையில் பல ஆண்டுகளாக மனிதக் கழிவுகளை மனிதர் அகற்றும் செயல் நடைமுறையில் இருந்து வந்துள்ளது.

இங்குள்ள நீரடைப்பு மலசல கூடங்களின் குழிகள் ஆழமற்றனவாகவும் நீரை உறிஞ்ச முடியாத கற்பாறைகளைக் கொண்டனவாகவும் இருக்கின்றபடியால் இவற்றில் சேரும் கழிவுகள் கூடத் தினமும் புல் தரையில் ஊற்றப்படும் நிலைமை இருந்து வந்துள்ளது. வாளி மலசல கூடங்களின் கழிவுகள் திறந்த குழிகளில் கொட்டப்பட்டன.

இத்தகைய சுகாதார சீர்கேடான முறையை மாற்றியமைக்க கழிவு அகற்றும் திட்டம் ஒன்று 15 ஆண்டுகளுக்கு முன் ஆரம்பிக்கப்பட்ட போதும் பல்வேறு காரணங்களால் இத் திட்டம் இதுவரை பூர்த்தி செய்யப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. [க]

## ஒளிவீச்சு சிறப்பு வெளியீடு

யாழ்ப்பாணம், ஜூன் 28

நிதர்சனம் நிறுவனத்தின் ''ஒளிவீச்சு'' சஞ்சிகை தனது மூன்றாவது ஆண்டில் பிரவேசிக்கிறது. அதனை யொட்டி, மே மாத ''ஒளிவீச்சு'' சிறப்பு வெளியீடாக வருகிறது.

தமிழீழத்தில் மே நாள் கொண்டாட்டம், காட்டுப் புளியங்குள பொலிஸ் — இராணுவ முகாம் மீதான தாக்குதல், ''முற்றுகையிட்டவர்கள் முற்றுகையிடப்பட்டு விட்டார்கள்'' என்ற அரசியல் நோக்கு, பொ. தாசனுடன் நேர்காணல், ''எதிர்காலம் கனவல்ல'' என்னும் குறும்படம் மற்றும் கலை நிகழ்ச்சிகள் அடங்கியுள்ளன. (அ-3)

## தமிழ்மன்றத்தின் முத்தமிழ் விழா

யாழ்ப்பாணம், ஜூன் 28

யாழ். பல்கலைக்கழக தமிழ் மன்றம் ஏற்பாடு செய்துள்ள முத்தமிழ் விழா எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 11ஆம், 12 ஆம், 13 ஆம் திகதிகளில் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. [ஐ-14]

## தொண்டமனாறு பாடசாலை இடமாற்றம்

யாழ்ப்பாணம், ஜூன் 28

கடந்த மாதம் நடைபெற்ற இராணுவ நடவடிக்கையால் இயங்க முடியாமல் இடம் பெயர்ந்த தொண்டமனாறு வீரகத்திப்பிள்ளை மகாவித்தியாலயம், தற்போது உடுப்பிட்டி அ. மி. கல்லூரிக் கட்டடத்தில் இயங்கி வருகிறது.

ஏற்கெனவே விடுமுறை காலங்களில் நடைபெற்று வந்த மேலதிக வகுப்புகளும் நடைபெறுகின்றன. (இ-5)

## திறப்பு விழா

யாழ்ப்பாணம், ஜூன் 28

பருத்தித்துறை ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தின பொலிகண்டி கந்தவன மடம் இன்று பி.ப. 4.30 மணிக்கு திறந்து வைக்கப்படும்.

புனரமைக்கப்பட்ட இந்த மடத்தை தேசிய சேமிப்பு வங்கி முகாமையாளர் திரு. க. கமலசேகரம் திறந்து வைப்பார்.

அதனைத் தொடர்ந்து மடத்தில் திரு. ஆ. சிவநாதனின் சிறப்புச் சொற்பொழிவு நடைபெறும். [அ]

## வேம்படி மாணவியருக்கு அழைப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 28

யாழ். வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையின் பரிசளிப்பு விழா பாடசாலை நிறுவுநர் தினமான நாளை நடைபெறுவதை ஒட்டி, 1993 இல் [illegible] அனுமதிபெற்ற மாணவிகளை கல்லூரியுடன் தொடர்பு கொள்ளும்படி அதிபர் வேண்டுகோள் விடுத்திருக்கிறார். (உ)

## சுகாதாரமற்ற தேநீர்க் கடைகள் மூடப்படும்

தென்மராட்சி, ஜூன் 28

சாவகச்சேரி சந்தைப் பகுதியில் சுகாதாரத்திற்கு அமைவாக இல்லாத ஒன்பது தேநீர்க் கடைகள் விரைவில் மூடப்படவுள்ளதாக தெரிய வருகிறது.

இக் கடைகளை மூடுவதற்கான கடிதங்கள் விரைவில் சுகாதாரப் பகுதியினரால் அனுப்பி வைக்கப்படவுள்ளன. (க-117)

## 'பாடசாலையில் நூலகம் திறப்பு

நவாலி அட்டகிரி சைவ வித்தியாசாலையில் மாணவர்களின் வாசிப்புத்திறன் விருத்தி கருதி நூல் நிலையம் ஒன்று ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

வித்தியாசாலை அதிபர் திரு. ஜி. வி. இராதாகிருஷ்ணன் தலைமையில், மானிப்பாய் லயன்ஸ் கழகத்தைச் சேர்ந்த லயன். தவராசா நூல்நிலையத்தைத் திறந்து வைத்தார்.

நூல் நிலையத்துக்கு பெறுமதி வாய்ந்த முந்நூறு புத்தகங்களை டாக்டர் கோ. சுந்தரராஜன் அன்பளிப்பாக வழங்கியுள்ளார். (க-90-152)

## நல்லாயன் பெருவிழா

யாழ். பல்கலைக்கழக கத்தோலிக்க மாணவர் ஒன்றியத்தின் நல்லாயன் ஆலயப் பெருவிழாத் திருப்பலி எதிர்வரும் ஞாயிறு காலை 7.00 மணிக்கு ஒப்புக்கொடுக்கப்படும். இதற்கான மூன்றுநாள் ஆயத்த வழிபாடுகள் நாளையும் மறுதினமும் மாலை 4.45 மணிக்கும் அடுத்தநாள் 4.30 மணிக்கும் நடைபெறும்.

இளைஞர் முகங்கொடுக்கும் பிரச்சினைகளும் அவற்றின் தீர்வுக்கு கிறிஸ்தவ அணுகுமுறைகளும் என்பவற்றைக் கருப்பொருளாய்க் கொண்டு வழிபாடுகள் நடத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## அச்சகம் சுற்றிவளைப்பு ஐவர் கைது

கொழும்பு, ஜூன் 28

போலி பட்டதாரிச் சான்றிதழ்களை அச்சிடும் அச்சகம் ஒன்றை மிரிஹானையில் பொலிஸார் கண்டுபிடித்துள்ளனர்.

இங்கு அச்சிடப்பட்ட போலி பல்கலைக்கழக பட்டதாரிச் சான்றிதழ்களில் சென்னை பல்கலைக்கழக சான்றிதழ்களும் அடங்கி உள்ளன.

கடந்த புதன்கிழமை பிரஸ்தாப அச்சகத்தைச் சுற்றிவளைத்த பொலிஸார் ஐவரைக் கைது செய்துள்ளனர்.

இவர்களில் இருவர் பெண்கள் என்றும் ஒருவர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (இ-6)

## போலி சான்றிதழ் அச்சகம் கண்டுபிடிப்பு

கொழும்பு, ஜூன் 28

சென்னைப் பல்கலைக் கழகத்தின் பெயர் பதித்த போலிச் சான்றிதழ்களை அச்சிட்டு வந்த அச்சகம் ஒன்று தென்பகுதியில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக அதன் உரிமையாளரான கிறிஸ்தவ மதகுரு ஒருவர் உட்பட ஐவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இவர்களுள் ஒருவர் வடபகுதியைச் சேர்ந்த தமிழ்ப் பெண் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. [ஐ-5]

# ஜே. வி. பி. தலைவர் நாடு திரும்பினார்?

மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே.வி.பியின்) தலைவர் சோமவன்ச அமரசிங்கா லண்டனிலிருந்து நாடு திரும்பிவிட்டதாகக் கொழும்பில் பரவலாகப் பேசப்படுகிறது.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசு வாக்குறுதி அளித்தபடி நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழித்து விட வேண்டும் என்று எச்சரிக்கும் தொனியில் கடந்த வாரம் இவர் அறிக்கை விடுத்திருந்தார்.

இம்மாதம் 22 ஆம் திகதியிட்டு வெளியிடப் பட்ட அந்த அறிக்கையில் சோமவன்ச அமரசிங்காவின் கொழும்பு விலாசம் ஒன்றே எழுதப்பட்டிருக்கிறது.

எனினும் அவர் கொழும்பில் தங்கியிருக்கிறாரா இல்லையா என்பது குறித்து தகவலை ஊர்ஜிதம் செய்வதற்கு ஜே.வி.பி. ஆதரவாளர்கள் மறுத்துவிட்டனர்.

சந்திரிகாவும் முந்திய தலைவர்களான ஜே ஆர், பிரேமதாச, விஜேதுங்கா போன்றே நிறைவேற்று ஜனாதிபதி முறையை பேண விரும்புவதாகவும்—

இதற்கு மக்கள் இடமளிக்கக் கூடாது என்றும்—அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (அ)

# தென் கிழக்கு பல்கலைக்கு மாணவர் பதிவு விரைவில்!

கொழும்பு, ஜூன் 28

அம்பாறை மாவட்டம் ஒலுவில் பகுதியில் அமையவிருக்கும் 9 ஆவது தேசிய பல்கலைக்கழகமான தென்கிழக்கு பல்கலைக்கழகத்துக்கான மாணவர்களை பதிவு செய்வதற்கான வேலைகள் இன்னும் ஒரு சில வாரங்களில் ஆரம்பிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்பல்கலைக்கழகத்துக்கான இடவசதிகளையும், கட்டட வசதிகளையும் நேரில் பார்வையிட்டு, பொருத்தமான இடங்களை தெரிவு செய்ய கல்வி, உயர்கல்வி அமைச்சர் ரிச்சர்ட்பத்திரான தலைமையில் உயர்மட்டக் குழு ஒன்று நேற்று அங்கு செல்லவிருந்தது.

பிரதி உயர்கல்வி அமைச்சர் பேராசிரியர் விஸ்வ வர்ணபாலா, அமைச்சர் அஷ்ரப், பிரதி அமைச்சர் எம். ஹிஸ்புல்லா உட்பட பல எம்.பிக்களும் இக் குழுவில் இடம் பெற்றிருந்தனர். [உ-3]

### யாழ். சுகாதார திணைக்களத்தில்

# முக்கூட்டு வக்சீன் மருந்து முடிவடையும் நிலையில்

யாழ்ப்பாணம், ஜூன் 28

யாழ் பிராந்திய சுகாதாரத் திணைக்களத்தில் குழந்தைகளுக்கான முக்கூட்டு வக்சின் ஊசி மருந்து கையிருப்பு முடிவுறும் தறுவாயில் உள்ளதாக அறியப்படுகிறது.

தற்போது கையிருப்பில் உள்ள இவ்வகை ஊசி மருந்துகள் இம் மாதத்திற்கு மட்டுமே போதுமானதாக இருப்பதாக யாழ். பிராந்திய சுகாதாரத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

இவ்வருடத்திற்கான இரண்டாம் காலாண்டு மருந்து வகைகள் சென்ற தடவை பருத்தித்துறைக்கு வந்த 'ஹப்றண' கப்பலில் எடுத்து வரப்பட்டிருந்தன: எனினும் முக்கூட்டு வக்சின் ஊசி மருந்துகள் எடுத்து வரப்படவில்லை.

இவற்றை எடுத்து வருவதற்கு ஏற்ற குளிரூட்டி வசதிகள் இன்மையாலேயே 'ஹப்றண' கப்பலில் அவை எடுத்து வரப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

## கோழிநோய் தடுப்பூசி

சண்டிலிப்பாய் சந்திக்கருகாமையிலுள்ள சங்கானைக் கால் நடை வைத்திய அதிகாரி அலுவலகத்தில் கோழிகளுக்கு நோய்த் தடுப்பு ஊசி மருந்து ஒவ்வொரு சனிக்கிழமைகளிலும் முற்பகலில் இலவசமாக போடப்பட்டு வருகின்றது.

கிராம அபிவிருத்திச் சங்கங்கள், சன சமூக நிலையங்கள் என்பன முன்கூட்டியே ஒழுங்கு செய்து தத்தமது பகுதிகளில் வைத்து இந்த நோய்த் தடுப்பு ஊசி மருந்தை கோழிகளுக்கு போடுவதற்கு ஏற்பாடு செய்ய முடியும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (க-135)

## புனர்வாழ்வு கழகப் பணிகள்

தமிழர் புனர்வாழ்வுக்கழக தென்மராட்சிப் பிரிவினர் நாவற்குளி லவனிதா குடியிருப்புப் பகுதியில் குழாய்க் கிணறு ஒன்றை அமைத்ததுடன் இப் பகுதியில் மலகூடங்கள் அமைக்கும் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். [க-117]

## குரக்கன் செய்கை

வலி தென் மேற்கு பகுதியில் குரக்கன் செய்கை விவசாயிகளினால் அதிகளவில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. சண்டிலிப்பாய், சங்கானை, சங்குவேலி, தொட்டிலடி ஆகிய பகுதிகளில் குரக்கன் பயிர்ச் செய்கையில் பல விவசாயிகள் ஈடுபடுகின்றார்கள். [க-135]

## பேச்சில் ..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பட்டன.

புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த அனுப்பப்பட்டவர்கள் கூட உயர் மட்ட, அனுபவம்வாய்ந்த, திறமையான அதிகாரிகளாக இருக்கவில்லை.

சமாதானப் பேச்சின் போது தீர்வுக்கான யோசனை எதுவும் காட்டப்படவும் இல்லை.

தீர்வுத்திட்டம் ஒன்று தயாரிக்கப்படாததே இதற்குக் காரணம் ஆகும்.

மொத்தத்தில் சமாதான முயற்சிகள் பாரதூரமான ஒரு விடயமாகக் கருதப்படவில்லை. இதேபோன்றுதான் யுத்தத்திலும் அரசு ஈடுபடுகின்றது.

இனப்பிரச்சினைத் தீர்வு யோசனைமூலம் கணிசமான அளவு அதிகாரப்பரவலாக்கல் வழங்கப்படும் என அமைச்சர் ஜி. எல். பீரிஸ் கூறியுள்ளார்.

இதில் அர்த்தமிருப்பதாகத் தெரியவில்லை.

ஏனெனில் ஏற்கனவே மாகாணசபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் மத்திய அரசிடம் ஒப்படைக்கப்பட உள்ளன.

உதாரணமாக காணிபற்றிய அதிகாரங்கள் மத்திய அரசிடம் ஒப்படைக்கப்பட உள்ளன. மாகாண சபைத் திட்டத்துக்கும் அதன்மூலமான அதிகாரப்பரவலாக்கலுக்கும், இது எதிரானதாகும்.

மாகாணசபைகளுக்கான அதிகாரங்களை பறித்துக்கொண்டு, கணிசமான அதிகாரப்பரவலாக்கல் வழங்கப்படும் என்று கூறுவதில் அர்த்தம் இல்லை.

இப்படி அவர் மேலும் தெரிவித்தார். [இ-14]

# தேசியப் போராட்டத்தில் "முகங்கள்" திரைப்படம் ஒரு திருப்புமுனை

### "நிதர்சனம்" பொறுப்பாளர் உரை

யாழ்ப்பாணம், ஜூன் 28

''முகங்கள்'' திரைப்பட வெளியீடு தேசியப் போராட்டத்தில் ஒரு திருப்புமுனையாக அமைகிறது.

ஞானரதனின் முகங்கள் வீடியோப்பட வெளியீட்டு விழாவில் தலைமை வகித்து உரை நிகழ்த்தியபோது ''நிதர்சனம்'' பொறுப்பாளர் திரு. ஜவான் இவ்வாறு கூறினார். விழா 21ஆம் திகதி ஸ்ரீதர் திரை அரங்கில் நடைபெற்றது.

கலை பண்பாட்டுக் கழகத்தின் ஆதரவுடன் 'நிதர்சனம்' தயாரித்த 'முகங்கள்' திரைப்பட வெளியீட்டு விழாவில் திரு. ஜவான் மேலும் கூறியதாவது;

குடாநாட்டில் நெரிசல்களின் மத்தியில் கஷ்டங்களுடன் வாழும் மக்கள் வளமும் வாழ்வும் வழங்கும் வன்னிப் பிரதேசத்தில் குடியேறுவது பயன்விளைக்கும் என்பதைப் படம் சித்திரிக்கிறது. தேசியத் தலைவரின் [illegible] வழிப்படுத்தலும் [illegible] தேசத்தின் வரலாறு காண்ப[illegible]மாக லொக்கிஷமாக உருவாக கலைஞர்களுக்கு உற்சாக மூட்டுகிறது என்று கூறினார்.

விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் கவிஞர் புதுவை இரத்தினதுரை பேசும் போது கூறியதாவது:

உலகத்திற்கு ஒரு உன்னதமான போராட்டத்தின் வழிகாட்டியாக விளங்கும் நாம் நல்ல கலைப் படைப்புக்களுக்கும் வழிகாட்டியாக விளங்க வேண்டும்.

நாம் தென்னிந்திய நச்சுச் சினிமாக்களுக்கு இலக்கியத்திற்கு எதிராக நிற்கிறோம்.

ஆனால் புலம் பெயர்ந்தவர்கள் தாம் வாழும் நாடுகளில் அந்த வகையான வற்றையே வளர்த்துக்கொண்டிருக்கிறார்கள். தென்னிந்தியாவிலும் பார்க்க அபத்தமான நிலை உருவாகிறது. சாறு பிழிந்து சக்கையான நிகழ்வுகளைக் கொண்டுவருகிறார்கள். [illegible] வமாக அறிவுபூர்வமாகச் சிந்திக்க ஆற்றுப்படுத்த முனைகிறோம். ஞானரதன் யாழ்ப்பாணத்து முகங்களைத் தரிசித்தவிதத்தை எல்லாம் நுணுக்கமாகச் சித்திரித்துள்ளார் இவ்வாறு அவர் கூறினார்.

எழுத்தாளர் செம்பியன் செல்வன், புலிகளின் குரல் திரு. வின்சன் திரு. காண்டீபன் ஆகியோரும்பேசினார்கள்.

முகங்கள் வீடியோப் படநாடாவின் முதல் பிரதியை தமிழீழ அரசியல் துறை பொறுப்பாளர் திரு. சு. ப. தமிழ்ச்செல்வனிடம் இருந்து இயலிசைவாரிதி பிரம்மஸ்ரீ ந. வீரமணி பெற்றுக்கொண்டார்.

சிறப்புப் பிரதிகளை மகளிர் பிரிவு துணை பொறுப்பாளர் செல்வி தமிழவன் வழங்கினார்.

திரு. சு. ப. தமிழ்ச்செல்வன் கலைஞர்களைக் கௌரவித்தார்.

லெப். கேணல் நவம், அறிவுக் கூடப்பொறுப்பாளர் திரு. சஞ்சய், செல்வி தமிழவன் ஆகியோர் மங்கள விளக்கேற்றினர்.

''முகங்கள்'' வீடியோப் படமும் காண்பிக்கப்பட்டது.

## மருந்து விநியோகம்

மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவைச் சேர்ந்த அரசினர் வைத்தியசாலைகளுக்கு யாழ். சுகாதார திணைக்களத்தின் பிராந்திய மருந்துக் களஞ்சியப் பிரிவினர் இவ்வருட இரண்டாம் காலாண்டிற்கான மருந்து வகைகளை கடந்த 14 ஆம் திகதி திணைக்கள லொறி மூலம் நேரில் கொண்டு சென்று விநியோகம் செய்துள்ளனர். சங்கானை அரசினர் வைத்தியசாலை, வட்டுக்கோட்டை கிராமிய வைத்தியசாலை, வட்டுக்கோட்டை மத்திய மருந்துச் சாலை, தொல்புரம் மத்திய மருந்துச் சாலை, பண்டத்தரிப்பு கிராமிய வைத்தியசாலை, மானிப்பாய் மத்திய மருந்துச்சாலை ஆகியவற்றிக்கே இவ்வாறு மருந்து விநியோகம் செய்யப்பட்டது. [க-135]

## புதிய தளபாடங்கள்

மானிப்பாயில் இயங்கி வரும் இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயத்திற்கு சுமார் ஒரு இலட்சத்து 20ஆயிரம் ரூபா செலவில் புதிய தளபாடங்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. மகாவித்தியாலய பழைய மாணவர்கள் பெற்றோர்கள் பொது நலன்அமைப்புகள், நலன் விரும்பிகள் ஆகியோர் வழங்கிய நிதி உதவியை கொண்டு நீண்டகாலமாக பற்றாக் குறையாக இருந்து வந்த மாணவர்களுக்கான வாங்குகள், மேசைகள் போன்ற மரத்தளபாடங்கள் அண்மையில் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாக வித்தியாலய அதிபர் சைவப் புலவர் திரு. சு. செல்லத்துரை தெரிவித்தார். (க-135)

## வேலை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தினம் இந்நிகழ்ச்சி நடைபெற்றது.

அங்கு ஜனாதிபதி கூறியதாவது:-

அரச மற்றும் தனியார் துறை ஊழியர்கள், தொழிலாளர்கள் தற்போதைய நெருக்கடியான காலகட்டத்தைக் கருத்திற் கொண்டு வேலைநிறுத்தம், ஆர்ப்பாட்டம் முதலியவற்றைத் தவிர்த்து, அமைதியை நிலைநாட்டும் பணியில் அரசுக்கு பக்கபலமாக இருக்க வேண்டும்; அரசுடன் இணைந்து செயற்பட வேண்டும்.

கடந்த 12 வருடங்களாக—சரியான திட்டங்கள் எதுவும் இன்றி—விடுதலைப் புலிகளின் பிரச்சினைக்குத் தீர்வுகாண இலங்கை அரசு உரிய முயற்சி எடுக்காததால்தான் தீர்வு காண முடியாத நிலை ஏற்பட்டது.

ஆனால் தற்போது அவைத்துக் கட்ட நடவடிக்கைகளும், யுத்த முயற்சிகளும் செறிவானவையாகவும் நன்கு திட்டமிடப்பட்டவையாகவும் மேற்கொள்ளப்படுகின்றன சர்வதேச சமூகமும் ஸ்ரீலங்கா அரசுக்கு ஆதரவு அளிக்கின்றது.

இப்போது மக்களின் ஒத்துழைப்பு இருந்தால் போதும். பிரச்சினைக்குத் தீர்வு கண்டு விடலாம்.

இந்த யுத்தத்தில் நாம் வெற்றியீட்டுவது உறுதி.

விடுதலைப் புலிகள் இயக்கம் முழு அளவிலான யுத்தத்தை விரும்புகின்றது என்றால் அவர்களுடன் சண்டையிட்டு வெற்றி பெறவும் அரசாங்கம் தயாராயுள்ளது.

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பது என்ற அரசின் தீர்மானத்தில் எவ்வித மாற்றமும் இல்லை.

இந்த தீர்மானத்தை எதிர்க்கும் எந்த ஓர் அமைப்பிடம் இருந்தும் நாட்டையும் மக்களையும் காப்பதற்கு அரசு தயாராகவே உள்ளது.

அரசு விடுதலைப் புலிகளை முற்றுமுழுதாக நம்பியது என்ற கூற்று தவறானது. சமாதானப் பேச்சுக்கள் நடைபெற்ற வேளையிலும் கூட இராணுவம் உஷார் நிலையிலேயே வைக்கப்பட்டிருந்தது.

தேசிய பாதுகாப்பு நிதிப் பணம் ஆயுதக் கொள்வனவுக்கு ஒரு போதும் பயன்படுத்தப்படமாட்டாது.

இராணுவத்தினரதும் அவர்களது குடும்பத்தினரதும் நலவாழ்வுத் திட்டங்களுக்கே பயன்படும்.

பாதுகாப்பு வரி உயர்த்தப்பட்டதால் எழுந்துள்ள நெருக்கடியை வர்த்தகர்களே தாமே சுமக்கத் தயாராக வேண்டும். அந்தப் பாதிப்பை மக்கள் மீது அவர்கள் சுமத்தக் கூடாது—

இவ்வாறு ஜனாதிபதி குறிப்பிட்டார். [உ-க-3-4-6]

## மரண அறிவித்தல்

### திருமதி பாக்கியம் கனகசிங்கம்

திருமதி பாக்கியம் கனகசிங்கம் காலம் கிஆட்டார். இவர் காலஞ்சென்ற செல்லப்பா கனகசிங்கம் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சின்னக்குட்டி - தங்கம்மா தம்பதிகளின் அன்பு மகளும், இந்திராணி, ஸ்ரீகாந்தா (ஸ்டீபன் இலங்கை பெந்தகொஸ்தே சபை), பத்மினி, தேவிகா, மகேந்திரன், ரவீந்திரன், நிர்மலா, வசந்தகுமாரி ஆகியோரின் அன்புத் தாயாரும், இராமநாதன், விக்னேஸ்வரவேல், குணரெத்தினம் (வ. பி போ. ச. கோண்டாவில்), மோகனலிங்கம், பவானி, ஜெயவாணி ஆகியோரின் அன்பு மாமியாரும், கனகரெத்தினம் (R. M. P.) காலஞ்சென்ற கனகம்மா மற்றும் மயில்வாகனம் (ஆசிரியர்), தனபாலசிங்கம், தேவராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரது பூதவுடல் இன்று (28 - 06 - 1995) புதன்கிழமை காலை 9 மணியளவில் இலக்கம் 115, ஆனந்தன் வடலி வீதியில் இருக்கும் அன்னாரின் இல்லத்தில் இருந்து தகனக் கிரியைகளுக்காக அரியாலை சித்துப் பாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
மு. குணரெத்தினம்.
(மருமகன்)

115, ஆனந்தன் வடலி வீதி,
அரியாலை.

(37264)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிற்றெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 28 06 - 1995 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org